www.tamilarangam.net



சித்திரை 1998

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடி

www.tamilarangam.net

# இரண்டு மனிதர்களும்; ஒரேயொரு நாயும்.

வெளிச்சம் உடைத்த சாக்கடை
ஷெல் சத்தம் காது வழியே கண் மறைத்து
மரண பயம் பாதை மறந்து
சாக்கடையில் நான் !

உடைந்திருந்த சேறு
சிதறல்களாகி
சேற்றில் கண்கள் திறக்க
மூளைக்குள்ளே
சாக்கடைச் சிதறல்
கூடவே சிதறிய என்
பால்யப் பள்ளிக் கூடம்
மூளைக்குள் தொலைந்து போய்

வெறிச்சோடிய ஊரில்
யாருக்கும் தெரியாமல்
எதிரிப் பிரதேசத்தில்
பற்றியி இழுத்த ஊர்ப் பிடிப்பில்
ஒற்றைப் பார்வையாளனாய்
நான் இங்கே!

என்னுடன்
இன்னும் சாகாமல்
அருகில் ஒளிந்திருக்கின்றன
இரண்டு நாய்கள்....

ஜனா பேரல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புன்னகை

## வணக்கம்

புலம்பெயர்ந்துவாழும் சூழலிலும் கலை இலக்கிய ஆர்வலர்களிடமிருந்து பல்வேறுவகையான சஞ்சிகைகள் தோன்றிக்கொண்டிருக்கின்றன. தோன்றிய கையோடு பல காணாமலும் போய்விடுகின்றன. இந்நிலையில் நாமும் புன்னகை சிந்த ஆரம்பிக்கும்போது ஏன் இந்தப்புன்னகை என்ற இயல்பான கேள்வி உங்களிடம் எழலாம்!

ஆயினும் இன்னும் இன்னும் தரமான சஞ்சிகைகளுக்குரிய தேவைகளும், அதன்மூலம் தரமான படைப்பாளிகள் ~ வாசகர்களின் உருவாக்கமும் அவசியம் என்றே கருதுகின்றோம்.

வாசகர்களின் நிலை பல்வேறுவகையானது. பல்வேறு தளங்களைக்கொண்டது. இந்நிலையில் ஓர் குறிப்பிட்டவாசகப்பரப்பினை நிரப்ப புன்னகை அவாவுகின்றது. இலக்கியத்துள் பல்வேறு கருத்துப்பரிமாற்றங்களுக்கும், ஆரோக்கியமான இலக்கியச்சர்ச்சைகளுக்கும் திறந்தமனத்துடன் இடங்கொடுக்க புன்னகை என்றென்றும் தயாராக இருக்கும். அதேவேளை தீவிரதேடலில் அக்கறைகொண்ட முற்போக்குச்சஞ்சிகைகள், பத்திரிகைகள் போன்றவற்றோடு நேசஉறவனைப்பேணவும் புன்னகை முன்னிற்கும்.

சிந்தும் புன்னகைகளை நேசத்தோடு ஏற்று மேலும் புன்னகை ஒளிபரவ உங்களால் முடிந்தளவு ஆதரவு நல்குவீர்கள் என்ற நம்பிக்கையோடு புன்னகையை உங்கள் கைகளில் தவளவிடுகின்றோம்.

நன்றி

கணனி எழுத்துப்பதிப்பு : மரியநாயகம், அன்பன், கருணாகரமூர்த்தி
அட்டைப்படம் : க. கலாமோகன் (ஒட்டோவியம்)
வடிவமைப்பு : ரிஏரி
தொடர்பு முகவரி :
A. Thavathasan, 4 Place Roger Salengro, 95140 Garges les Gonnes, France

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுகதை

# உபசாரம்

பொ.கருணாகரமூர்த்தி
பெர்லின்

அதொன்றும் வழக்கமான விஷயமல்ல. ராகுலனை செஃப்பே வலியக்கூப்பிட்டு 'உனக்கின்னும் ஒரு கிழமை ஊர்லாப்(விடுமுறை) இருக்கு......... மேலதிமாய் இன்னும் ஒரு கிழமை தாறன்....... இந்த மாதம் நீ விரும்பினால் வெளியில எங்காவது போறதென்டால் போய்வா............' என்றான்.

'ஓ........ஜா.....!'

மனதுள் சந்தோஷப்பனி தூவ அதைத்தாங்கமுடியாத தவிப்புடன் ராகுலன் விசிலும் வாயுமாய் வீடுவந்து சேர்ந்தான். இரவுமுழுதும் மனைவி லதாவுடன் பிரான்ஸுக்குப் போவதா, இல்லை சுவிஸுக்குப் போவதா என விவாதித்தும் ஒரு தீர்மானத்திற்கும் வரமுடியவில்லை. சுவிஸில் லதாவின் அண்ணன் குடும்பமிருக்கிறது. பிரான்ஸிலோ ராகுலனுக்கு உறவுகள் ஏராளம்.

கடைசியில் என்றும் போல் லதாவே வென்றுவிட எண்ணிறந்த பலகாரவகைகளாலும், அண்ணனின் குழந்தை மயூரனுக்கு வாங்கிய ஏராளம் பரிசுப்பொருட்களாலும் டிக்கி நிரம்பி வழியவழிய அவர்களது கார் அஷ்டமி,நவமி, மரணயோகம், கரிநாள் தவிர்த்த ஓர் நல்லோரையில் ஷுரிச் நோக்கி கோலாகலமாய் புறப்பட்டது.

எட்டு மணிநேரச்சவாரிக்களைப்போடு ஷுரிச்சில் அண்ணன் வீட்டுவாசலை அடைந்தும் உள்ளே அடிஎடுத்து வைக்க மேலும் நாலு மணிநேரம் நற்றவமியற்ற வேண்டியிருக்கும் என்று அவர்கள் எதிர்பார்க்கவில்லை. அண்ணனும் அண்ணியும் வேலைக்குப் போனதாக ஏப்றன் கட்டிக்கொண்டு கண்ணாடி ஜன்னல்கதவுகளைத் துடைத்துக்கொண்டு நின்ற அயல்வீட்டுக்காரி செப்பினாள்.

'அப்போ அவர்கள் பேபி....? '

'எங்காவது ஹோர்ட்டில் (குழந்தைகள் பராமரிப்பகம்) விட்டிருக்கலாம்!.'

இவர்கள் நிலமையை அறிந்தும் சுவிஸ்க்காரி அந்நியரை அதுவும் கறுத்த வெளிநாட்டுக்காரரை தன் வீட்டுக்குள் அழைத்து உட்காருங்கோ என்று உபசரித்துவிடுவாளா என்ன.......

தன்பாட்டுக்குக் கதவைச்சாத்திக்கொண்டு உள்ளே போனாள்.

அண்ணியும் வேலைக்குப்போய்விடுவாள்...... பகலில் யாருமிருக்கமாட்டோம் என்பதை முதலிலேயே சொல்லித்தொலைத்திருந்தால்....... இரவு வந்துசேரும்படியாகப் புறப்பட்டிருக்கலாம். இப்படிக் கைக்குழந்தையுடன் தெருத்தூங்கவேண்டியிருந்திராது.

'சுவிஸுக்குவருகிறோம்.' என்று ரெலிபோன் பண்ணியபோதே அண்ணன் உள்ளுக்கிழுத்தது ஏனென்று இப்போதான் லதாவுக்கு மெல்ல ஓடி வெளித்தது. எனினும் ராகுலனை மேலும் குழப்பவேண்டாமென்று சமர்த்தாயிருந்தாள். ராகுலன் லதாவைக் கல்யாணம் கட்டுவதற்கு முன் அவனை ஷுரிச் ரெயில்வேஸ்டேசனுக்கே வந்து காத்துக்கிடந்து வார்த்தைக்கு வார்த்தை 'அத்தான்.........அத்தான்.........' என்று அன்பொழுக அழைத்து நிலபாவாடை விரிக்காத குறையாக அழைத்துப்போனதும் இந்த மைத்துனன்தான்.

அவர்கள் எப்போதுதான் வருவார்கள் என்று தெரியாமல் வெட்டிக்கு வீதியில் காத்திருப்பது இரத்த அழுத்தத்தை அதிகப்படுத்தியது.

குழந்தை பசியெடுத்து அலறத்தொடங்கினாள். அவளுக்குப் பால் கரைக்க வேண்டிய வெந்நீர் வேறு தீர்ந்துவிட்டிருந்தது.

ஒரு ரெஸ்ரோறன்டைத் தேடிப்போய் கேட்டபோது அவன் உள்ளே பைப்பில் பிடித்திருக்கவேணும் 'வெந்நீர்' என்று சொல்லிக்கொண்டு வந்து கொடுத்தான். அச்சூட்டில் மா கட்டிபட்டுக் கரைய மறுத்தது.

'வேறேதாவது கடையில கேட்டுப்பார்ப்பமே.....' என்று காரைக்கிளம்பவும் விருந்தோம்புவார் ஒருவாறு வந்துசேர்ந்தனர்.

www.tamilarangam.net

இவ்வளவு நேரம் தெருவில் காக்கவைத்ததிற்காக ஒரு —sorry— யாவது சொல்லவேணுமே...... ஊஹூம்! 'இத்தனை மணிக்கு வந்துசேர்வோம் என்று உறுதியாக முன்பே சொல்லாதது உங்களது தப்புத்தான்' என்றார்கள். அதையிட்டு ஒருவிவாதம் நடத்த அவர்களிடம் மேலும் சக்தியில்லை. மௌனம் காத்தனர்.
வழியில் சாப்பிடுவதற்காகப் பண்ணிக் கொண்டுவந்த சான்ட்விச்சுகள் நிறையவே மிஞ்சிக்கிடந்தன. எல்லோருக்கும் இரவுச்சாப்பாட்டிற்குப் போதுமானதாக இருந்தது.

மறுநாள் காலை அண்ணன் வேலைக்கப்புறப்பட தானும் வெளிக்கிட்டுக்கொண்டு வந்த அண்ணியார்சுகுணா லதாவுக்குச் சொன்னாள்.
'நானும் ஓரிடத்தை போகவேணும்...... வரக்கொஞ்சம் செல்லும் செல்லும்.' ஓரிடத்துக்கு என்றால்...... 'அதைப்பற்றி மேலே கேளாதே' என்பதுதான் அதற்குரிய உளவியல். இது லதா அறியாததா?
அவர்கள் குழந்தை மயூரனையும் இழுத்து வைத்துச் சட்டையை அணிவிக்கையில் மட்டும் சொன்னாள்:
'மயூரன் நிற்கட்டும் அண்ணி நான் பார்த்துக் கொள்ளமாட்டனே...... '
'வேண்டாம் லதா அவன் பயங்கரக்குழப்படிவிடுவன், ஒருவருக்கும் அடங்கான்.........'
அதற்கு முனனேபின்னே ஒருநாளும் முகம் பார்த்திராமலேயே லதாவைக்கண்டதிலிருந்து அவன் குழைஞ்சு குழைஞ்சு அவளுடன் சேர்ந்தமாதிரியைப் பார்க்க அப்படி அது அடம்பிடிக்கிற குழந்தைமாதிரியே தெரியவில்லை. இயல்பில் குழந்தைகளில் அதீதபிரியமுள்ள லதாவுக்கு மொழுமொழுவென்றிருந்த அவனுடன் விளையாடவும் ஆசையாயிருந்தது. இருந்தும் அவனையும் அவர்கள் வெளியே இழுத்துக்கொண்டு போவதன் சூத்திரம் முழுவதும் அறியாமல்வற்புறுத்திக்கேட்கத் தயங்கினாள்.

அவர்கள் புறப்பட்டுப் போனபின்பு குசினியுள் போய்ப்பார்த்தார்கள். நார்முடையொன்றுள் கொஞ்சம் முளைவிட்ட உருளைக்கிழங்கு, புருவமெனக் குனித்தும் வாடியும்போன ஒரு கூர்க்கன் (கெக்கரிக்காய்), ஒரு பிளாஸ்டிக் பைக்குள்(எழுதித்தான் எடுப்பித்தார்களோ?) கோழிகூடக் கொறிக்கத் தயங்கும் ஒரு சுண்டு குறுணல்அரிசி தவிர வெளியாய் வேறொரு சமைக்கக்கூடிய வஸ்தும் இருக்கக்கூடிய தடயங்கள் புலப்படவில்லை. பிறிட்ஜைத் திறந்து பார்த்தார்கள். யார்சாபமோ ஐஸுடன் ஐஸாய் கல்லாய்ச் சமைந்துபோய் மல்லாக்கக் கிடந்தது ஒரு கோழி (அதுவும் கிறில் பண்ணுவதற்கான மலிவுப்பதிப்பு). அதையங்கிருந்து பெயர்த்தெடுக்கக்கூடிய ஈட்டி, வேலன்ன ஒருபோர்க்கருவியோ, கடப்பாரையோ எங்காவது தென்படுகிறதா என்று தேடினார்கள்.
திடீரென கி.செ.துரையின் கதையொன்றில் சிவபதமடைந்த தேதி தெரியாத கோழியைச்சாப்பிட்ட ஒருவர் வயிற்றுள் கடுஞ்சமர்மூண்டு கலக்கி அவதிப்படுத்திய சம்பவம் ஞாபகம் வரவும்.........
அந்த எண்ணத்தை அதிலேயே போட்டுவிட்டு Migros Markt தேடிப்போய் ஆட்டிறைச்சி மற்றும் சாமான்கள் வாங்கிவந்து சமைத்துச் சாப்பிட்டார்கள்.
மாலையானதும் அண்ணன்குடும்பம் வந்து சேர்ந்தது. சாப்பாடானதும் அண்ணன் செற்றிக்குள் சாய்கோணத்தில் இருந்துகொண்டு ராகுலனிடம் ஜெர்மனியில் தனிநபர் வருமானம், சேமிப்பு சாத்தியஅசாத்தியங்கள், நடப்பு வட்டிவீதங்கள், மற்றும் அத்யாவசிய நுகர்ச்சிப்பண்டங்களின் விலைதலைகள் பற்றி உசாவினார். பின்னொரு கோழித்தூக்கம் போட்டார். அலாம் வைத்தது போல் ஏழு மணிக்கு எழும்பி பாத்றூம் போனார். பின் ஜாக்கெட்டை மாட்டினார்.
'எனக்கு ஒரு அலுவலிருக்கு வெளியில.' என்று வெளியேறியவர்தான் எல்லாரும் படுக்கைக்குப்போனதன் மேல் பதினொருமணிக்கு வந்துசேர்ந்தார்.

மறுநாளும் இதே செயன்முறைகள் நேரசூசிகை போட்டதுபோல் நடந்தேறின. ஆனால் அண்ணியார் சுகுணாமட்டும் கொஞ்சம் மாற்றி தான் தையல்கிளாஸுக்குப் போவதாகச் சொன்னாள்.

மூன்றாம்நாள் காலை புறப்படமுதல் அண்ணியார் லதாவிடம் சொன்னாள் : 'மயூரனை கின்டர் ஹோர்ட் ஒன்றில கொஞ்சநாளாய் விடுகிறனாங்கள்........ புதுசில தனிய நிக்கிறானில்ல அழுகிறான்....... அதுதான் நானும் போய்க்கூட நிக்கிறனான்........தனிய

www.tamilarangam.net

நிற்கப்பழகிட்டனென்றால் நானுமெங்கையென்டாலும் பார்ட் டைம் ஜொப்புக்குப் போகலாமென்றார் இவர்......... அவரும் தனியாளாய் அடிச்சு என்னத்தைத்தான் மிச்சம் பிடிக்கிறது இந்த நாட்டில இருக்கிற விலைவாசியில......'

அன்று மாலை அவர்கள் வந்திறங்கக்கூடிய நேரந்தான்....... ரெலிபோன் அடிக்கிறது. எடுப்பதா விடுவதா என்று லதா குழம்பவும்..... மீண்டும் மீண்டும் மீண்டும் அடிக்கிறது. ராகுலன் சொன்னான் 'போய் எடும் சிலவேளை கொண்ணனாய்கூட இருக்கலாம் '

போய் எடுத்தால் மறுமுனையில்.........
'குறுய்ஸ் கொட்..... நான் சூசாரா.... மன்னிக்கவேணும் அப்போது உறுதிப்படுத்த மறந்துவிட்டேன்..........துகுணா........ நீ முன்னர் ஒத்துக்கொண்டபடி அடுத்த வார இறுதிநாட்கள் இரண்டும் என்னுடைய ஷிப்ட் வேலையையும் சேர்த்துச்செய்வாய்தானே....?'
(வியட்னாமோ தாய்லாந்துக்காரி....... வார்த்தைகளை நசித்து மழலை பேசினாள்.)
'மன்னிக்கவேணும் நான் சுகுணாவல்ல..... அவர் வீட்டுவிருந்தாளி. இது சுகுணா வாறநேரந்தான் நீங்கள் அவர் வந்த பிறகு பேசுவது நல்லது. குறுய்ஸ் கொட்.....!'

அண்ணியாவது ஏற்கெனவே உறவுக்காரி கொஞ்சம் வாஞ்சையாய் இருப்பாள். அணைச்சு சிரிச்சு கதைப்பாளென்று எதிர்பார்த்து வந்த லதாவுக்கு அவள் ஏதோ கடன்காசைக் கேட்கப் போயிருக்கிறவர்களிடம் பேசுவதுமாதிரி முகங்கொடுக்காமல் கதைக்கிறதும் திருப்பிறதும் பெரும் ஏமாற்றமாயும் அவமதிப்பாயுமிருந்தது. ஆனாலும் ராகுலனிடம் சொல்லமுடியவில்லை.

அவர்கள் வீடு திரும்பவும் லதா அண்ணியாரிடம் சொன்னாள்:
'சூ....சாரா என்று யாரோ போன் எடுத்தார்கள்'
திடீரென்று அவள் முகம் கலவரமாகியது. மறைத்துக்கொண்டு ஆனால் குரலில் சற்றுப்பதட்டத்துடன் கேட்டாள்:

'எ...எ..எ.என்னவாம்..........?'
எனக்கு அவள் பேசிய ஜெர்மன் ஒண்டும் விளங்கேல்லை...... எதுக்கும் 'நீங்கள் வந்தாப்போல எடுங்கோ என்றன்...வைச்சிட்டாள்' என்ற பிறகுதான் அவளுக்கு மூச்சு வந்தது.
உதட்டை வலிந்து மலர்த்தி எமது தலைவி சந்திரிகாவைப் போல ஒரு சிரிப்பை உதிர்த்துவிட்டு 'என்னோட தையல்கிளாஸுக்கு வாற ஒரு தாய்லாந்துப்பிள்ளை.......'என்றாள்.
நாலாம்நாள் மாலை அண்ணன் சாப்பிட்டபின்னால் பான்பராக் போட்டுக்கொண்டு கோழித்தூக்கம் போடமுதல் திருவாய்மலர்ந்தார்.
'ஜெர்மனியைப்போல இல்லை..... இஞ்சை........ கண்டகண்டபாட்டுக்கு ஆக்களைப் பிடிச்சு அனுப்பிறாங்கள்....... நீங்களும் அறிஞ்சிருப்பியள்தானே....... எந்த நேரமும் காட்டைப்பிடுங்கிக்கொண்டு ஊருக்கேத்திற நிலமை எங்களுக்கும் வரலாம்........ முந்தி உளைச்சதுகளை அப்பிடியே வீட்டுக்குக்குடுத்தன்........ அடுத்தவளுக்குச் சீதனங்கொடுத்தன்........ லதாவைக்கூப்பிட்டன் கையிருப்பு காலி. இனிமேற்கொண்டு பார்ட் டைம் ஜொப் ஏதாவது பண்ணிக்கிண்ணினால்த்தான் நாலு காசைப்பார்க்கலாம் அதுதான் இப்ப கொஞ்சநாளா பின்னேரத்தில பார்ட் டைம் ஜொப்பொன்றுக்குப் போறனான்...'

ராகுலன் அவன் பேச்சில் அசிரத்தையாய் முகட்டைப் பார்த்துக்கொண்டிருந்தான். அண்ணாச்சி தொடர்ந்தார்..........

'அங்கை சமையலெண்ணை லீற்றர் ஒண்டரை மார்க்கென்றியள்.........இஞ்ச லீட்டர் அஞ்சு பிராங்கெல்லே..........வரேக்க மட்டும் உந்தப்பெரிய கொம்பியில பத்து லீற்றர் கேசில ஒரு பத்து அடிச்சந்திருந்தா....... சும்மா ஐநூறு மார்க் வெளிச்சிருக்கும்..........'
(ராகுலன் மனதுள் —யாருக்கு.....?)
கதை மீண்டும் பொருண்மியத்திக்கிலே செல்ல அரிவு தாங்காமல் ராகுலன் கேட்டான்:

— உங்கடை ஷூரிச்சில என்னதான் விஷேசம்........
அதைச்சொல்லுங்கோ.........—
—விஷேசமெண்டு......?—
—இங்க யாரும் ரூரிஸ்ட்டுக்கள் வந்தால் என்னத்தைப் போய்ப்பார்க்கிறவை....?—
- நானூறு கிலோ மீட்டர் தள்ளி..........ஜெனீவா என்றால்

www.tamilarangam.net

யூ.என்.ஓ கட்டிடத்தைச்சொல்லலாம்......... இஞ்சை ஒரு நூற்றைம்பது இருநூறு கிலோமீட்டரில ஒரு சேர்ச் இருக்காம் .........எங்கட சனமும் சிலது போறது......... வடக்கை ஷௌகவுசனில ஒரு நீர்வீழ்ச்சியிருக்காம்.......... நானென்றால் இதொண்டுக்குமின்னும் போகேல்ல.........இருக்கிற வேலைக் கரைச்சலுகளுக்கை எங்களுக்கெங்கால நேரம்.........?

லதா ஆற்றாமல் கேட்டாள்:

—அப்ப ஒரு ஆபத்து அந்தரத்துக்குத்தன்னும் உங்களுக்கு லீவு எடுக்கேலாதோ அண்ணை?—

'இப்ப மற்ற வேலைக்குத்தான் லீவெடுத்தாலும்....... பார்ட் டைம் வேலைக்கு எடுத்தேனென்டால் எங்கையெண்டிருக்கிற நம்ம சனமே ஓடிப்போய் புகுந்திடும்.......... பிறகு கோவிந்தாதான்...........கிறிஸ்மஸ் லீவுக்கை வந்திருந்தியளெண்டால் சோக்காய் எல்லாம் பார்த்திருக்கலாம்........'

(ராகுலன் மனதுக்குள் 'இதுதான் ஸ்னோ மலையாய் கொட்டிக்கிடக்கு பார்.......' என்றிருப்பான்.)

இவர்கள் ஒரு நாளாவது லீவு போட்டுவிட்டு தம்மோடு சந்தோஷமாக நிற்பார்கள் அல்லது ஏதாவது ஒரு இடத்திற்குக் கூட்டிப்போவார்கள் என்ற நம்பிக்கை அறவே பொய்த்துப்போய் அவர்களது 'பொருள் முதல் உலகம்' வேறென்பதும் புரிந்து போயிற்று.

சடுதியான காலநிலை மாற்றம் ஒத்துக்கொள்ளவில்லையோ என்னவோ லதாவின் குழந்தைக்கு பகல் முழுவதும் லேசாக உடம்பு காய்ந்தது. பின்னேரமும் கொஞ்சம் சிணுங்கிக்கொண்டிருந்தாள். மயூரனுக்கும் காய்ச்சல் தொற்றிக்கொண்டுவிடும் என்ற பயத்தில்போலும் அண்ணனும், அண்ணியும் மாலை முழுவதும் மாடியில் இருந்த தம்படுக்கைபறையே கதியென்று கிடந்தார்கள். கீழிறங்கவேயில்லை. அண்ணன் பார்ட் டைம் வேலைக்குப்போய்வந்து மீண்டும் கடுவன் பூனைமாதிரி மாடிக்கு ஏறிப்போனான். அண்ணி குசினிக்குள்ளிருந்து சாப்பாடு எடுத்துக்கொண்டு போய் அவனுக்குக் கொடுத்தாள். ஒரு சம்பிரதாயத்திற்குக்கூட அவர்கள் 'என்ன..... குழந்தைக்கு எப்பிடியிருக்கு....?' என்று விசாரிக்கவில்லை. லதாவும் தனக்குள் உதிர்ந்து போயிருந்தாள். ராகுல் தன் குடும்பத்தைப் பற்றி மிகமட்டமாக எடைபோடப்போகிறான் என்ற பயத்தில் மௌனம் காத்தாள். ராகுலுக்கும் அவர்கள் போக்காலங்கே மேலும் தங்க அதைரியமாகவும், கூச்சமாகவும் இருந்தது.

இரவுமுழுவதும் குழந்தை அடிக்கடி சற்றே கண்ணயர்வதும் பின் எழும்பி அழுவதுமாயிருந்தது. இருவரும் மாறிமாறி தோளில் தூக்கிப் போட்டுக்கொண்டு சிறிய கூடத்திலும் ஆளோடியிலும் உலாத்தினார்கள்.

குழந்தையின் அழுகையில் அண்ணன்காரனுக்கு வந்த உறக்கம் கலைந்து கலைந்து போனது. அடுத்த தடவை கலைந்தபோது எரிச்சலுடன் எழும்பி வெளியேவந்து மாடிப்படியில நின்று அதட்டினான்.

'ஏய்........ லதா உந்தப்பிள்ளையைக் கொஞ்சம் அழாமல்தான் பாரன்....... மனுஷர் விடியவேலைக்குப் போகவேணுமல்லே.......'

'பிள்ளைக்குச்சாடையாய் காயுதண்ணை...... அதுதான் அழுகிறாள்....'

'சுகமில்லையெண்டால் நேரத்தோட டொக்டரிட்டை காட்டியிருந்திருக்கலாமில்லை!'

அற்பப்பயலே அவர்கள் உனது விருந்தினர்கள். நீயல்லவா டாக்டரிடம் கூட்டிப்போயிருக்க வேணும்.

'பராசெற்றோமோல் ஒன்று குடுத்திருக்கிறன்...... தணியுதோ பார்ப்பம்....'

'என்ன குடுத்தியோ....... இனியும் அழுதால் மயூரனும் எழும்பி வாசிக்கத்தொடங்கிடுவன்........ பிறகெனக்கு வெளியில குதிக்கிறதைத்தவிர வேறை ஒண்டுஞ்செய்யேலா...........'

பிள்ளையே பெற்றுக்கொள்ளாதவன் மாதிரி அவன் பொழிந்துவிட்டு உள்ள போகவும் ராகுலன் லதாவின் காதில் மெல்ல

www.tamilarangam.net

ஆனால் உறுதியான குரலில் சொன்னான்:

'..... நாங்கள் உறவென்று நம்பி பிழையான இடத்துக்கு வந்திட்டம் லதா............ இப்ப பிள்ளைக்குச் சட்டையைப் போட்டிட்டு...... நீரும் உடன வெளிக்கிடுறீர். இதுக்கு மேலயுமிங்கை ஒரு நிமிஷந்தன்னும் என்னால தங்கேலாது........'

லதா ஒரு மறுப்பும் சொல்லவில்லை. அவனோடு ஓசைப்படாது வெளிக்கிட்டாள். குழந்தையின் சாமான்கள் எல்லாம் சரிதானாவென்று இன்னொருதரம் சரிபார்த்து எடுத்துக்கொண்டு சூட்கேஸ்களுடன் மெல்ல வெளியேறிக் கதவைச்சாத்திக்கொண்டு காரில் போய் அமர்ந்த பின்புதான் நிம்மதி உண்டானது.

கார் சுவிற்சலாந்து—ஜெர்மனி எல்லை நகரமானை Basel அண்மிக்கவும் மலைகளும், பள்ளத்தாக்குகளும் மறைந்து சமதரையிலான விரைவுசாலையில் மணிக்கு 120கி.மீ வேகங்கொள்ள அனுமதித்திருந்தார்கள். எதிர்த்திசையில் ஆபிரிக்க இறக்குமதியான வெள்ளாடுகளை நிறைத்துக்கொண்டு வேகமாக வந்த பாரஉந்தொன்று அவர்களது காரையும் சற்றே குலுக்கிவிட்டு சுவிஸ் நோக்கி அம்புருவிப்பறந்தது.
சற்றே பயந்துவிட்ட லதா சொன்னாள்:—
'கண் மண் தெரியாமல் அவன் பறக்கிற வேகத்தைப்பார்த்தியளே........?'

'எல்லாம் கொண்ணன் கோவிச்சுக்கொள்ளப்போறாரெண்ட பயத்திலதான்........'

'என்ன அண்ணை கோவிக்கப்போறாரெண்டோ....... என்னப்பா சொல்லுறியள்.......?'

'அதெல்லாம் அவர் எங்களுக்காக ஓடர் பண்ணின ஆடுகள்தாளே....... அதுதான் விருந்துக்கு லேட்டானால் கோவிச்சுக்கொள்ளப்போறாரெண்டு பறக்கிறான்.......'

சுவிஸ் நோக்கிக் கார் திரும்பியதிலிருந்தே சிரிப்பைத் தனியாகவே கழற்றி வைத்திருந்த லதா கண்களில் நீர் முட்டும்வரை கனிந்து குலுங்கிக்குலுங்கிச் சிரித்தாள்.



www.tamilarangam.net

'என்னவோ தெரியாதப்பா அண்ணை முந்தியிப்படியில்லை..... இப்ப சரியாய் மாறித்தான் விட்டார். அண்ணியோட சேர்ந்து எதுக்கெடுத்தாலும், ஒரு இடத்தை போறம், ஒரு சாமான் வேண்டவேணும், ஒரு ஆக்கள் தந்தவை, ஒரு பகுதி வரும்......... என்று சஸ்பென்ஸ் வைத்துத்தான் கதைக்கிறார்.'
'அது சஸ்பென்ஸ் மாத்திரமில்லை....... மற்றவர்களை நாங்கள் ஒரு டிஸ்டென்ஸிலதான் வைத்திருக்கிறம் என்கிறதின்ற படிமம் அது..!'

அண்ணாச்சி அவர்கள் வீடு தேடிவந்து 'நாங்கள் வேலைப்பழுவில உங்களைச் சரியாய் உபசரிக்காம விட்டிட்டம்....... மன்னிச்சுக்கொள்ளுங்கோ' என்று சாஷ்டங்கமாய் காலிலெல்லாம் வீழ்ந்துவிடப்போவதில்லை. சிலவேளை ரெலிபோனில் ஏதாவது பெனாத்தலாம். வீட்டுக்கு வந்ததும் முதலில் ரெலிபோன் இணைப்பைப் பிடுங்கிவிட்டார்கள். குழந்தையை டாக்டரிடம் கொண்டுபோய்க் காட்டியதில் அன்று மாலையே காய்ச்சல் சுகமாகித் தவழ்ந்தோடித்திரிந்தது.

மறுநாள் மாலை தோட்டத்தில் சாய்வுகதிரையைப் போட்டுக்கொண்டு ராகுலன் ஹேர்மன் ஹெஸ்ஸவின் சித்தார்த்தாவை வாசித்துக்கொண்டிருக்கையில் சிற்றுண்டியும் சேமியாப்பாயாசமும் பரிமாற அங்கே வந்த லதாவைக்கேட்டான்:

'ஊர்லாப்தான் இன்னும் ஒரு கிழமை இருக்கே.... பாரீஸுக்குப் போவமே.......?'

அப்போ அவனை லதா மேற்கண்ணால் பார்த்த ஓர் பார்வையிருக்கே.........ச்சொ.

சரி. நாங்கள் மெல்ல மாறுவம்............. அதை ராகுலன் தனியே ரசிக்கட்டும். ■

19.12.1997. பெர்லின்
('பூவரசு' நடாத்திய சிறுகதைப்போட்டியில் முதற்பரிசு பெற்ற கதை)

அன்பான உபசரிப்பு!
அறுசுவை உணவு வகை!
என்றென்றும்.....

VM

வதனி மஹால்

17, Rue Labat,
75018 PARIS

Tél. 01 42 52 22 02
M°: Marcadet Poissonniers

www.tamilarangam.net



விலாசக்கூத்துக்கலைஞர்

# அண்ணாவி அமரசிங்கத்துடனான

## ஓர் நேர்காணல்

- பா. இரகுவரன்

**தங்களின் விலாசக்கூத்துப் பிரவேசம் எவ்வாறு நிகழ்ந்தது ?**

எனது தந்தையார் கார்த்திகேசு அவர்கள் ஒரு விலாசக்கூத்துக் கலைஞர். புற்றளைப் பிள்ளையார் கோவிலில் வருடாவருடம் சிவராத்திரிக்கு கூத்தாடி வந்தார். கூத்துப் பழக்கங்களுக்கு தந்தையாருடன் செல்வது வழமை. பழக்கத்தின் போது ஆர்மோனியப்பெட்டி வாசித்தும் பிற்பாட்டுப் பாடியும் உதவி செய்வேன். தந்தையாரின் மறைவுக்குப் பிறகு 1965 ஆம் ஆண்டு *லவகுசாவில்* லவனாக ஆடத் தொடங்கினேன். அப்பொழுது வினாசித் தம்பியவர்கள் அண்ணாவியாராக இருந்தார்.

**தங்களது கூத்துக்குழு பற்றி சிறிது கூறுங்கள் ?**

பரம்பரையாக சிவராத்திரிக்கு கூத்தாடி வருகின்றோம். இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் சிறந்து விளங்கிய விலாசக் கூத்து அண்ணாவி தாமோதரம்பிள்ளை அவர்களின் நினைவாக *தாமப்பா குழு* என்றே எம்மை அழைக்கின்றார்கள். நாங்கள் தொழில்ரீதியான கலைஞர்கள் அல்ல. பல்வேறு தொழில் புரிவோரும் எமது குழுவில் உள்ளார்கள் .

**விலாசக்கூத்து எத்தனை ஆண்டு களாக ஆடப்பட்டு வருகின்றது என்று கூறமுடியுமா?**

இது பற்றிய வரலாறு எனக்குச் சரியாகத் தெரியாது. ஆயினும் நூறு வருடங்களுக்கு மேலாக ஆடிவருவது நிச்சயம். அதற்கு முன் நாட்டுக்கூத்து ஆடி இருக்கலாம் .

**சாதி கலந்தாடும் வழக்கம் உங்கள் குழுவில் இடம் பெறுகிறதா ?**

வேளாளரும், வேளாளர் அல்லாத உயர் சாதிப்பிரிவினரும் என்போர்தான் எமது குழுவில் இடம் பெறுகின்றனர் .

**அண்ணாவி ஏரம்பு தங்களுடன் சேர்ந்து ஆடினாரே?**

ஆம்,அவர் பறையடிக்கும் தொழிலாளர் சமூகத்தைச் சேர்ந்தவர். எமது அண்ணாவி வினாசித்தம்பியின் மறைவுக்குப் பிறகு பழக்குவதற்கு தகுதியாக யாரும் எமது குழுவில் இல்லாமையால் நாம் ஏரம்புவின் உதவியை நாடினோம். சமூகப்பிரச்சனைகள் பல தடையாக இருந்த போதிலும் நாம் துணிவுடன் ஏரம்பு அண்ணாவியாரை களரியில் இறக்கித் தாளமிட வைத்தோம். கடவுளுக்குக் கூத்தாடாவிட்டால் ஏற்படப்போகும் விளைவுகள் பற்றிய அச்சமே ஏரம்பு அண்ணாவியாருக்கும் துணிவைக் கொடுத்தது எனலாம்.

**தங்களது குருவென்று யாரைக் கூறுவீர்கள் ?**

ஏரம்பு அண்ணாவியாரைத்தான் கூறுவேன் இவரின் மூலம்தான் விலாசக்கூத்தின் நுட்பங்களை என்னால் அறிந்துகொள்ள முடிந்தது. 1968 ஆம் ஆண்டிலிருந்து சில வருடங்கள் பயிற்சி அளித்தார். ஏரம்புவின் மறைவிற்குப் பிறகு விலாசக் கூத்தை சிறப்பாக அறிந்த அண்ணாவி எவரும் இல்லை என்றே கூறலாம் .

**ஏரம்பு அண்ணாவியாரின் மறைவுக்குப் பிறகு விலாசக்கூத்தை எவ்வாறு தொடர்ந்தர்கள் ?**

www.tamilarangam.net

தாமப்பா குழுவின் சார்பில் சிவராத்திரிக்குக் கூத்தாடும் பொறுப்பு என்மீதே சார்ந்திருந்தமையால், நானும் வேறு சில நண்பர்களும் கூட்டாக பழக்கி 1985 வரை ஆடினோம். பின்னர் நாமாமோடிக்கு மாறினோம்.

**என்ன காரணத்தால் விலாசக்கூத்தை விட்டு நாமாமோடியை ஆடத் தொடங்கினர்கள் ?**

பார்வையாளர்களின் எண்ணிக்கை குறைந்து விட்டதுதான் பிரதான காரணம் வெறும் நிலத்தில் கவர்ச்சியில்லாத கொட்டகையில் கூத்தாடுவதைப் பார்க்க முதியவர்களைத் தவிர ஏனையோரின் வரவு குறைவாகவே இருந்தது. பல்வேறு கோயில்களில் சிவராத்திரிக்கு இசைக் குழுக்களின் நிகழ்சிகள், வீடி.ஓ படக்காட்சிகள், பட்டிமன்றங்கள் என்பவற்றால் கவரப்பட்டு பலர் சென்று விடுகின்றார்கள். இதனால் கவர்ச்சியான மேடை அமைத்து நாமாமோடியை ஆடினோம்

**அப்படியாயின்கவர்ச்சியான மேடையில் விலாசத்தையே ஆடியிருக்கலாம்அல்லவா?**

ஆம், ஆடியிருக்கலாம்தான். அவ்வேளையில் நாமாமோடி நாடகங்களே செல்வாக்குப் பெற்றிருந்தன. நாமாமோடி சற்று நவீனமானதாகவும் கருதப்பட்டது. எமது குழுவின் கலைஞர்கள் பலரும் விலாசம் பழையதாகிப் போய்விட்டது, எமக்கு நாமாமோடியும் ஆடமுடியும் என்று காட்ட வேண்டும் எனவும் விரும்பினார்கள் .

**விலாசப்பாடல்களுக்கும், ராமாமோடிப் பாடல்களுக்கும் என்ன வேறு பாட்டைக் கூறுவீர்கள் ?**

விலாசப்பாட்டு மெட்டுக்கு அன்னியம் வைத்தே நாமாமோடியில் பாடுகிறார்கள். நாமாமோடியில் அலங்காரம் வைத்துப்படிப்பார்கள். விலாசப்பாட்டு சற்று இழுத்துப் பாடப்படும். நாமாமோடிப் பாட்டு அழுத்திப் படிக்கப்படும். ஆனால் இரண்டிலும் ஒரேவகையான காட்சிகளில் பாட்டுக்கு இராகம் மாறவேண்டிய அவசியம் இல்லை.

**எழுபதுகளில் இருந்து நீங்கள் அரிச்சந்திர விலாசத்தை ஆடும் போது நாமாமோடிப் பாடல்களையும் கலந்து நிகழ்த்தி யுள்ளீர்களே?**

அரிச்சந்திர விலாசம் ஆரம்பத்தில் இருந்து பெரும்பகுதி விலாசப் பாணியில் தான் ஆடப்பட்டது. இறுதியில் மயானம் காக்கும் பகுதியை மட்டும் நாமாமோடியில் ஆடினோம். ஏனென்றால் வைரமுத்து அவர்களின் மயான காண்டம் புகழ்பெற்ற பின்பு அந்த முறையிலே பாட்டுக்கள் படித்து நிகழ்த்துவதையே மக்கள் விரும்பினார்கள்.

**மக்கள் விரும்புகின்றார்கள் என்பதற்காக இவ்வாறு செய்யும் போது விலாசக்கூத்தை சரியாகப் பாதுகாக்க முடியாமல் சிதைத்து விட்டீர்கள் என்ற குற்றச்சாட்டு எழுவதற்கு வாய்ப்பிருக்கிறது அல்லவா ?**

ஒன்றை நீங்கள் கவனிக்க வேண்டும். நாங்கள் சிவராத்திரி முழிப்புக்கு ஆடுகிறவர்கள். கூத்தைப் பாதுகாக்கின்றோம் என்று யாருக்கும் நாங்கள் சொல்ல வில்லை. குற்றம் குறை கூறுபவர்கள் அதைப்பழகி நல்லமுறையில் பாதுகாக்க உதவி செய்ய நாம் எப்பொழுதும் தயாராக இருக்கின்றோம்.

**விலாசத்தில் கர்நாடக சங்கீதத்தின் தாக்கம் அதிகம் என்கி றார்களே ?**

நாட்டுக் கூத்துடன் ஒப்பிட்டு அவ்வாறு கூறியிருக்கலாம். விலாசக்கூத்து புகழ் பெற்றிருந்த காலத்தில் கர்னாடக சங்கீதம் முக்கியத்துவம் பெற்றிருந்தது. கலைஞர்கள் இராகங்களில் வல்லுனராக இருப்பதை பெருமையாகக் கருதினர். விலாசக் கூத்திலும் இந்த நிலமை வெளிப்படுத்தப்பட்டது. அதற்காக நாமாமோடியில் சங்கீதம் குறைவு எனக்கூற முடியாது. சங்கீத ஞானமும், சாரீர வளமும்மிக்க ஒருவரால் நாமாமோடியை நல்லமுறையில் உணர்ந்து செய்யமுடியும் .

> *பார்வையாளர்களின் எண்ணிக்கை குறைந்து விட்டதுதான் பிரதான காரணம்வெறும் நிலத்தில் கவர்ச்சியில்லாதகொட்டகையில்கூத்தாடுவதைப் பார்க்க முதியவர்களைத் தவிர ஏனையோரின் வரவு குறைவாகவே இருந்தது*

**விலாசக்கூத்தில் ஆட்டம் அகலுகிறது என்று ஆய்வாளர்கள் கூறியுள்ளார்களே?**

ஆய்வு பற்றி எனக்குத் தெரியாது எங்கள் விலாசக்கூத்தில் வரவு ஆட்டம் உண்டு. பிறகு ஆட்டத்தைக் கவனிப்பது குறைவுதான். வாய்ப்பான பாடல்களுக்கு ஆடித்தான் பாடுகிறோம்.

**நாட்டுக்கூத்து ஆட்டத்திற்கும் விலாசக் கூத்தின் ஆட்டத்திற்கும் இடையில் வேறுபாடு உண்டா ?**

www.tamilarangam.net

நாட்டுக்கூத்து பற்றி எனக்கு அதிகம் தெரியாதபடியால் இது பற்றி என்னால் கூற முடியாது உள்ளது.

**விலாசம், நாமாமோடி என்ப வற்றை ஆடி இருக்கிறீர்கள் உங்களுக்கு எது சிரமமின்றி ஆடக்கூடியதாக உள்ளது ?**

விலாசம் ஆடியோருக்கு நாமாமோடி இலகுவாக இருக்கும் என்பது என் கருத்து. ஆனால் நாமாமோடிக் கலைஞருக்கு விலாசம் அப்படியல்ல முதலில் அவர்கள் ஆட்டம் பழக வேண்டும். இழுத்துப்பாடும் முறையையும் பழகவேண்டும்.

**சதுரமாக மூன்றுபக்கமும் திறந்த நிலத்தில் ஆடப்படும் கொட்டகை விலாசக் கூத்துகளுக்கு உரிய தொன்றா ?**

எம்மைப் பொறுத்த வரையில் விலாசத்தை அப்படியான கொட்டகையில்தான் ஆடி வந்தோம். ஆனால் அயல்க்கிராமத்தைச் சேர்ந்தவர்களால் நாட்டுக்கூத்தும் இதே மாதிரியான கொட்டகையில்தான் ஆடி வந்தனர்.

**உங்களது கூத்துக் கொட்டகைகளில் ஒளி, ஒலி வசதிகள் எவ்வாறு அமைந்திருந்தன ?**

நான் ஆடத்தொடங்கிய காலத்தில் மின்னொளி வந்து விட்டது. ஒலி வாங்கியையும் ஒருபக்கத்தில் பொருத்தி வைத்தோம்.

**ஒலிவாங்கியை ஒருபக்கத்திற்கு பொருத்தும் போது ஆற்றுகையும் ஒருபக்கத்திற்கு உரியதாகி விடுகிறதல்லவா ?**

ஆம், அப்படித்தான். வரவு ஆட்டத்தை மூன்று பக்கத்திற்கும் தெரியும்படி ஆடினாலும், கூத்தின் பாடல், வசனம் எல்லாம் ஒரு பக்கத்திற்குரியதாகத்தான் நிகழ்ந்தது.

**மூன்று பக்கம் திறந்த அரங்கில் ஒருபக்க ஆற்றுகை நிகழும்போது அந்த அரங்கு அர்த்தமற்றுப் போய்விடுகிறதல்லவா?**

இது பற்றிக் கருத்துக்கூற முடியவில்லை. எனக்கு முன்னயவர்களும் அண்ணாவியாரும் சொல்லித் தந்ததையே நாங்கள் செய்கிறோம்.

**விலாசக்கூத்தில் இசைக்கருவிகளாக எவற்றைப் பாவித்தீர்கள் ?**

மத்தளம், ஆர்மோனியம், தாளம் ஆகிய மூன்றையும் பாவித்தோம். தாளத்துடன் அண்ணாவியார் களரியில் நிற்பார். மத்தளக்காரரும், ஆர்மோனியக்காரரும் களரியின் பின்னால் இருப்பர்.

**விலாசக்கூத்தின் ஒப்பனை வேட உடுப்புகள்பற்றி சிறிது கூறுங்கள் ?**

முத்து வெள்ளையைத்தான் பிரதானமாகப் பயன் படுத்துகின்றோம். அத்துடன் புதியவகை ஒப்பனைப் பொருட்களையும் பயன்படுத்தினோம். வேட உடுப்பைப்பொறுத்தவரையில் நாட்டுக்கூத்துகளில் பாவிக்கப்படுவது போல் கிரீடம், புஜகிரீடம் போன்றவற்றுடன் பிரதான ஆண் பாத்திரங்களுக்கு பாவாடை போன்ற அமைப்பில் சேலையைக் கயிற்றில் கொய்து கட்டினோம்.

**விலாசக்கூத்துக்கென தனித்துவமான வேட உடுப்புக்கள் ஒப்பனை முறைகள் என்பன இல்லையா ?**

எனக்குத் தெரிந்தவரை அப்படி ஏதும் இருக்கவில்லை .

**உங்கள் விலாசக்கூத்துக் கலைஞர்கள் சிலர் சிலம்படியில் தேர்ச்சி பெற்றவர்களாக இருப்ப தால் ஆட்டத்தில் சிலம்பத்தின் அசைவுகளும் கலந்திருப்பது எந்த அளவு சரியானது ?**

நானும்,இன்னும் ஒருசிலரும் சிலம்பக் கலையில் தேர்ச்சி பெற்றவர்களாக உள்ளோம். சிலம்பத்தில் பெற்ற அனுபவம் கூத்தாட்டத்தில் காலெடுத்து வைத்தல், திருப்புதல், வாள்சுழற்றி ஆடுதல் என்பவற்றை துரிதமாகச் செய்து பார்வையாளரைப் பெரிதும் கவர உதவுகிறது. நாம் கூத்தாட்டம்தான் ஆடுகிறோம் சிலம்பாட்டம் ஆடவில்லை என்பதை உறுதியாகக் கூறுவேன்.

**கடந்த மூன்று வருடங்களாக விலாசக்கூத்தை படச்சட்ட மேடையில் ஆடி வருகின்றீர்கள். இந்த அனுபவம் பற்றி சிறிது கூறுங்கள் ?**

1995இல் இம்முயற்சி ஆரம்பமாகியது நாடகத்துறையில் ஆர்வமுள்ள நண்பர் ஒருவரின் தூண்டுதலால் இது நிகழ்ந்து வருகிறது. வீரகுமாரன் என்ற விலாசக்கூத்தைச் சுருக்கி 2 மணித்தியாலத்திற்கு ஆடி வருகின்றோம். மேடையில் நாமாமோடிக்குரிய ஒப்பனை, வேட உடை என்பனவற்றையே பயன்படுத்துகிறோம். காட்சிகளுக்கு சீன்கள் பயன்படுகின்றன. வரவு விருத்தம், ஆட்டத்தரு, பொது விருத்தம் போன்றவற்றை பக்கமாக நின்று படித்துத் தாளமிடுகிறேன். மற்றும்படி பெரிய மாற்றங்கள் ஏதும் செய்யவில்லை.

**விலாசக்கூத்தை இவ்வாறு தொடர்ந்து ஆடும் திட்டம் ஏதும் உள்ளதா ?**

ஆம், வேறு விலாசக்கூத்துகளையும் சுருக்கி ஆடும் திட்டம் உள்ளது. பாஞ்சாலி சபதம், அரிச்சந்திர விலாசம், லவகுசா என்பவற்றை அடுத்தடுத்துச் செய்யஉள்ளோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நூல் அறிமுகம்

## பொலிவிய நாட்குறிப்பு

### சேகுவேரா

— சி.புஸ்பராஜா —




அந்த டைரியை நான் படித்தபோது. அந்த டைரி ஒரு உன்னதமான புரட்சிக்காரரின் இரத்தத்தால் எழுதப்பட்டிருக்கிறது. என்றுணர்ந்தேன்.

புரட்சிகர கியூபாவுக்கு 1960ம் ஆண்டு சோவியத் யூனியன் அரசு சார்பாகவும். கட்சி சார்பாகவும் பயணம் மேற்கொண்ட அனஸ்டஸ் இவோனோவிச் மிகோயன் 1971ம் ஆண்டு மாஸ்கோவில் பத்திரிகையாளர் ஒருவரின் கேள்விக்கு அளித்த பதில்தான் மேலேயுள்ளது.

அண்மையில் தமிழுலகிற்கு மொழி பெயர்ப்பின்மூலம் கிடைத்த நூல்களில் கனதியான ஒரு நூலாக 'பொலிவிய நாட் குறிப்பு' அமைகிறது. 1966. நவம்பர் 7ம் திகதி சேகுவேரா பொலிவிய நாட்டிலுள்ள நான்காகுவாஸ–க்கு போய்ச்சேர்ந்தது முதல் 1967 அக்டோபர் 7ந் திகதி வரை (ஹிகுயேரா என்னுமிடத்தில் சேகுவேரா கொல்லப்படுவதற்கு இரண்டு நாட்களுக்கு முன்புவரை) அவரால் மேற்கொள்ளப்பட்ட அன்றாட புரட்சிகரப் பயணம் பற்றிய நாட்குறிப்புகளைக் கொண்ட இந்த 'பொலிவிய நாட்குறிப்பு' இன் முதல் பதிப்பு 1968 யூன் மாதம் கியூபாவின் தலைநகரமான ஹவானாயில் வெளியிடப் பட்டது.

1967 அக்டோபர் 9ந் திகதி பொலிவியாவில் ஹகுயொரா என்னுமிடத்தில் வைத்து அமெரிக்க கைக்கூலிகளால் சேகுவேரா கொல்லப்பட்டு 31 ஆண்டுகள் ஆகின்றன. ஆனாலும் அந்த மாமனிதனின் நினைவுகளை எந்த ஏகாதிபத்திய கொம்பனாலும் அகற்ற முடியாதென்பதும் உலக புரட்சிகர சமூகங் களின் மனங்களில் வேருன்றி சே இன்றும் வாழ்ந்கொண்டிருக்கிறார் என்பதும் பொலிவிய நாட்குறிப்பை நாம் கைகளில் வைத்துக் கொண்டிருக்கும்பொழுதுஎம்மனங்களில் எழும் எண்ணமாகும்.

1928 ூன் 14ல் ஆர்ஜென்ரனாவில் ரொசாரியோ நகரில் பிறந்த எர்னஸ்டோ குவெரா கட்சித் தோழர்களால் சே என அன்பாக அழைக்கப்பட்டு இன்று சேகுவேரா வாக எல்லார் மனங்களிலும் இடம்பிடித்துக் கொண்டார். 1955ம் ஆண்டு கியூப புரட்சித் தலைவர் பிடல் காஸ்ரோவை சந்திக்கும்வரை சேகுவேரா மெக்சிக்கோவில் சிறந்தொரு மனிதநேயம்மிக்க மருத்துவராகக் கடமையாற் றினார்.பிடலைச் சந்தித்த பின்பு தன்னையொரு புரட்சிக்காரனாக மாற்றிக்கொண்ட சே பிடலுடன் மெச்சிக்கோ சிறையிலும் இருந்தார். பிடலுடன் சே க்கு ஏற்பட்ட தொடர்பானது கியூபாவின் புரட்சிகர விடுதலை வரலாற்றில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவரையொரு பங்காளியாக்கியது. 1959ம் ஆண்டு கியூபாவின் தலைநகரான ஹவானா சே தலைமையிலான புரட்சியாளர்களாலே கைப்பற்றப்பட்டது.

கியூபாவின் புரட்சிகர விடுதலையுடன் தனது கடமை முடிந்துவிட்டதாக சே நினைத்திருந்தால் இன்று கியூபாவின் மா பெரும் தலைவர்களில் ஒருவராக அவர் உயிர் வாழ்ந்திருப்பார். ஆனால், சே ஆர்ஜென்ரைனாவில் பிறந்து குவாத்தமாலாவில் அரசுக்குத் துணை நின்று மெக்சிக்கோவில் கடமை புரிந்து கியூபாவில் புரட்சிக்காரனாகி பொலிவிய நாடுவரை புரட்சியை தூக்கிச்சென்ற சர்வ தேச வாதியல்லவா? சேயை– ஒரு புரட்சியாளனாகப் பார்க்காமல் அவரை ஒரு சர்வதேசப் புரட்சியாளனாகப் பார்க்க வேண்டும். அவர் ஒரு உண்மையான பாட்டாளி வர்க்கசர்வ தேசியத்தை உருவாக்கவேண்டும் என்று விரும்பினார். இதையே பொலிவிய நாட்குறிப்பு முன்னுரையில் பிடல் கஸ்ரோ மிக அழகாகக் குறிப்பிட்டார். வருங்காலத்தில் ஒரு பாட்டாளி வர்க்க சர்வதேச வாதியின் உதாரணம்பற்றி பேசும்போது பாட்டாளி வர்க்க சர்வதேச வாதியின் முன்மாதிரியாக யாரையேனும் குறிப்பிட வேண்டி வரும்போது மற்றெல்லோரையும் விஞ்சி அங்கே முதன்மையாக சே இருப்பார்.

> **ஆனாலும் அந்த மாமனிதனின் நினைவுகளை எந்த ஏகாதிபத்திய கொம்பனாலும் அகற்ற முடியாதென்பதும்; உலக புரட்சிகர சமூகங்களின்மனங்களில் வேருன்றி சே இன்றும் வாழ்ந்கொண்டிருக்கிறார்.**

ஒரு புரட்சிகரக் கொரில்லாக கூட்டத்துடன் பொலிவிய நாட்டின் காடு, மலைப் பிரதேசங்களில் சேகுவேரா ஏகாதிபத்தியத்தின் கைக்கூலிப்படைகள் துரத்திப் பின்தொடர மேற்கொள்ளும் துணிச்சல்கரமான பயணத்தின் வரலாற்றுக் குறிப்புகளைக் கொண்ட 'பொலிவிய நாட் குறிப்பு ' இன் ஒவ்வொரு பக்கங்களும் ஒரு போர் வீரனின் போர்க்கள அனுபவங்களை படிக்கும் ஆர்வத்தடன் எம்மை அழைத்துச் செல்கிறது. மலை உச்சிகளிலும் காடுகளிலும் தண்ணீர் உணவு இன்றியே பல நாட்களை சே யும். அவரது தோழர்களும் ஓட்டியதைப் பற்றி குறிப்பில் அங்கும் இங்குமாகப் பல இடங்களில் காணலாம். 1966 ஏப்ரல் 25ந் திகதிய நாட்குறிப்பை சே எழுதும்போது 'இன்று ஒரு மோசமான நாள் எனக்குறிப்பிட்டு அன்று நடந்த யுத்தத்தைப் பற்றி விபரிக்கிறார். அன்றைய யுத்தத்தில் தனது மிக வேண்டிய தோழன் ரொலான்டோவின் மரணத்தால் பாதிப்புற்று 'சிறிய உருவமுள்ள துணிச்சல் மிக்க வீரனான நீ இறப்பினால் புகழ்வாய்ந்தவனாக அழிவற்றவனாகிவிட்டாய்' என சே குறிப்பிடும் இடம் பார்க்கும்போது இதயத்தில் இனம்புரியாத சோகம் உருவாகி நிற்பதை நாம் உணர்கிறோம். இப்படிப் பல பக்கங்கள் எங்கள் இதயங்களைத் தொட்டு நிற்பதையே வெளியீட்டாளர் நண்பர் திருநாவுக்கரசு 'பொலிவிய நாட்குறிப்பைப் படிக்கும்பொழுது சே ஓர் பேரிலக்கியத்தின் அவல வீரனாகக் காட்சியளிப்பதாகக் குறிப்பிடுகின்றார்.

போலிவிய நாட்குறிப்பின் இறுதிப் பக்கங்களில் அதாவது அக்டோபர் மாதக் குறிப்புக்களில் சே யின் எதற்கும் அஞ்சாத துணிச்சலையும் அவரது தன்னம்பிக்கையையும் புரட்சியின்மீது அவர்கொண்ட விடாப்பிடியையும்நாம் உணரக்கூடியதாயுள்ளது. தன்னை எதிரியின் படைகள் நெருங்குகிறார்கள் என்பதை சே ஓரளவுக்கு உணர்ந்தேயிருந்தார். ஆனாலும் துணிச்சலுடனும் தன்னம்பிக்கையுடனும் தனது அணிவகுப்பை அவர் தொடரும் கம்பீரம் எல்லோருக்கும் வந்துவிடப்போவதில்லை. அக்டோபர் 7ந் திகதி தன் கடைசி வரிகளை எழுதிய சே தன்னுடனிருந்த மிகக் குறைந்த எண்ணிக்கையிலான போராளிகளுடன் மறுநாள் எதிரிகளை எதிர்த்து மிகவும் தீரமுடன் போராடினார் என்பதை பிடல்கஸ்ரோ தமது முன்னுரையில் துயருடன் கூறுகிறார்.

கியூபாவில் புரட்சிகர ஆட்சியை அமைத்ததிலிருந்து இன்றுவரை அமெரிக்காவின் கண்களில் விரல்விட்டு விளையாடும் இரும்பு மனிதன் பிடல் கஸ்ரோவின்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முன்னுரை 'பொலிவிய நாட்டுக் குறிப்புக்கு பெரும் கம்பீரத்தை ஏற்படுத்தியுள்ளது. சே யின் பொலிவிய நாட்டுக்குறிப்புக்குள் போகுமுன் கண்டிப்பாக பிடல் கஸ்ரோவின் முன்னுரையை படித்தேயாகவேண்டும். அந்த மனிதர் எவ்வளவு விடயங்களை புட்டு வைக்கிறார் பாருங்களேன்.

தமிழ் மொழி பெயர்ப்பில் வந்துள்ள 'பொலிவிய நாட் குறிப்பு' 192 பக்கங் களைக்கொண்டு அழகிய முறையில் சென்னை தாமரைச்செல்வி பதிப்பகத்தினால் வெளியிடப் பட்டுள்ளது. அமரந்தா அவர்கள் தமிழாக்கம் செய்துள்ளார். சே யின் வாழ்க்கைக் குறிப்புடன் பெற்றோருடன் சே, மனைவி குழந்தைகளுடன் சே, பிடல் குஸ்ரோவுடன் சே, போராளிகளுடன் சே, சேயைத் தேடி அலையும் சி.ஐ.ஏ. கைக்கூலிகள் என அருமை பெருமையாக கிடைக்கக்கூடிய சுமார் 20 புகைப்படங்களும் சேயின் நாட்குறிப்பின் மூலப்பிரதியின் படங்கள் எனவும் நூல் மிகவும் கனதியாகத்தான் உள்ளது. இன்பவியல் களத் தலைவனை விட துன்பவியல் நாயகன் மட்டுமே மக்கள் மனதில் தொடர்ந்து பதிந்து வருவதாக வெளியீட்டாளர் திருநாவுக்கரசு அவர்கள் குறிப்பிடுகிறார். நல்லதொரு வரலாற்றுக் குறிப்பை தமிழில் படிக்க எமக்குதவிய தாமரைச் செல்வி பதிப்பக அதிபர் திருநாவுக்கரசு- மொழியாக்கம் செய்த அமரந்தா மற்றும் நண்பர்களுக்கு நாம் நன்றிக்கடன்பட்டுள்ளோம்.

**(தான் வெறுத்த எதிரியின் அதிகாரத்தில் அவர் கழித்த வாழ்வின்கடைசி மணி நேரங்கள் அவருக்கு மிகக்கசப்பகனதாக இருந்திருக்க வேண்டும். ஆனால். ஆந்த மாதிரி ஒரு சோதனையை சேயைத் தவிர, வேறெந்த மனிதனும் சந்தித்திருக்க முடியாது.) -முன்னுரையில் பிடல் கஸ்ரோ.**

வெளியீடு தாமரைச் செல்வி பதிப்பகம்
31/48. இராணி அண்ணா நகர்
கலைஞர் கருணாநிதி நகர்
சென்னை- 600078.

விலை- இந்திய ரூபா 60/

P.V.C ஜன்னல் கதவு 10 வருட
உத்தரவாதத்துடன் மாற்றிக் கொள்ளவும்,
மற்றும் திருத்த வேலைகட்கும்

ETS NINTHAR

MENUISERIES - PLOMBERIE -
CARRELAGE - RENOVATION

☎ 01 64 88 43 74



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சின்ன சின்ன மூன்று கதைகள்....

## 1.

தூபல் வண்டிலுடன் லிப்ருக்குள் இறங்குவது பற்றிய பயம் என்னை இன்னமும் விட்டபாடாயில்லை.
ஆனாலும் போய்த்தான் ஆகவேண்டும்.
இழுக்கமுடியாத சுமையோடு இயங்கினேன். தூபல் மணமெடுத்தது. போதாக்குறைக்கு லிப்ருக்குள் ஒரு வைன்கேஸ் வேறு. அந்த மனிதன் ரவுசருடனே மலம் கழித்திருந்திருக்கவேண்டும். உப்பிகிடந்த முகத்திலிருந்தும் ஏதோ திரவம் வழிந்தது. எனக்குக் குமட்டியது. ஆறுமாடி தூரம் லிப்ற் இறங்கவேண்டும். மனிதன் சுவரோடு சாய்ந்தபடி நின்றுகொண்டிருந்தான். தூபல் வண்டில் நான் அவன். எனக்கும் அவனுக்குமான இடைவெளி அதிகமில்லை. மூக்கைப்பொத்திப்பார்த்தேன். முடியவில்லை. மணம் சீறியது.

மூன்றரை மாடி இறங்கியிருக்கும். லிப்ற் ஏதோ கோளாறினால் நின்றுவிட்டது.
'ஐயோ'
நான் மயங்கிவிட்டேன்.
முழித்துக்கொண்டபோது அந்த மனிதனின் அரவணைப்பில் நான். தனது சிறுநீரால் என் முகத்திற்குத் தெளித்துக்கொண்டிருந்தான் — என் மயக்கம் தீர்வதற்காக.

## 2.

620ம் இலக்க பஸ்ஸிற்காகக் காத்துக்கொண்டு நின்றபோது 148ம் இலக்க பஸ்வந்து நின்றது.
60 வயது வரையிலான ஒரு மனிதர், தள்ளுவண்டியை முதலில் இருவர் இறக்க பிறகால் சீற்றைப்பிடித்து, கம்பியைப் பிடித்து, முதலில் இறங்கியவர்களின் கையைப்பிடித்து மெள்ளமாக இறங்கி வந்தார். ஒரு கால், அரை இயக்கத்தில் இருந்தது. றைவரும், சக பயணிகளும் பொறுமையாக அனுதாபத்தோடு காத்து நின்றனர். நானும் தான்.

உதவிக்காக இறக்கியவர்கள், ஏதோ சமூகசேவைகாரர்கள் என்ற என் நினைப்பு, அவர்களை அந்த மனிதர் தொடர்ந்தும் உதவிகேட்க, அவர்கள் முடியாதநிலையில் விலகிப்போனதிலிருந்து விலகியது. பஸ்ஸில் ஏறியதிலிருந்து இறங்கும் வரையில் அவர்கள் உதவியிருக்கிறார்கள். இனி முடியாது. அப்படிப்பார்த்தபோது அவர்கள் பெரிய மனிதர்களாகவே தெரிந்தார்கள். அந்தமனிதர் தள்ளுவண்டியுடன் இயங்கமுடியாமல் இயங்கிக்கொண்டு கையால் சக்கரங்களைச்சுழற்றிக்கொண்டு நகர்ந்தார். பார்க்கப் பாவமாக இருந்தது. பாவம். மனிதர். உலகில் எத்தனை விதமான மனிதர்கள். இரண்டு மூன்று நபர்களை உதவிகேட்டும் பலன் கிடைக்கவில்லை. உதவி செய்யாமல் நழுவியவர்களை நினைக்க எனக்கு கோபம் கோபமாக வந்தது.

தள்ளுவண்டியை, மனிதர் கைகளால் இயக்கிக்கொண்டு என்னை அண்மித்தார்.
என்னை உதவிக்காக பார்ப்பது போலவும் இருந்தது. எங்கிருந்து வந்ததோ தெரியாது. அப்போதுதான் தீவிர சிந்தனை ஒன்று என்னுள் முளைத்து நிற்க நான் எங்கேயோ பார்த்தபடி நின்றுகொண்டிருந்தேன் — பலவேறு பினாத்தல் காரணங்கள் என்னுள் சரசமாடின.

## 3.

வேலை ஸ்தலத்தில், அன்று காலை எதேச்சையாக நண்பனுடன் தொலைபேசியில் கதைத்துக்கொண்டிருந்தேன்.
அப்போதுதான் வந்துசேர்ந்த புதியவாடிக்கையாளரையும் காக்கவைத்து். படைப்பிலக்கியம் படைப்பு என என்னை மறந்தநிலையில் என்னாலும் ஓரளவுக்காவது படைக்கமுடியும் என ஏதோ ஆவேசமாகவும் இரண்டு மூன்று நிமிடங்கள் வரை கதைத்து விட்டு றிஸீவரை வைத்தேன்.
'ஓம் சொல்லுங்கள்!'
போட்டோ கொப்பி எடுப்பதற்காக வந்ததிருந்த பெரியவரின் பேச்சு, அடக்க ஒடுக்கமாக கனகச்சிதமாக இருந்தது.
தோற்றத்தில் வாழ்வை நன்கு கற்றுத்தேர்ந்தவர் போலவும் — கண்ணைக் கசக்கிப்பார்த்தால் ஒருபார்வைக்கு எஸ்.பொ. போலவும் இருக்க நான் இன்னும் மரியாதையானேன். ஏதாவது பிறவிஷயம் கதைக்க வாய் உன்னியது. ஆனாலும் பயமாய்க்கிடந்தது.

போட்டோக்கொப்பி எடுத்த காகிதங்களை எதேச்சையாக மடித்துவைத்துக்கொண்டே கேட்டார். 'என்ன படைப்பு பற்றி ஏதோ கதைச்சியள்'
எனக்கு உடம்பெல்லாம் குளிர்ந்தது. சொற்கள் வரத்தயங்கின.
'இல்லை ஏன் கேக்கிறீங்...' வார்த்தை முடியாமல் தொண்டை தடுக்கியது.
'இல்லை, சும்மா கேட்டன்' எண்டார். பேர்சுக்குள் சில்லறைகள் அமைதியாக சொருகியவாறே.
அந்தப்பதிலில் 'ம்ஹூம். நீங்களெல்லாம் இலக்கியம் கதைக்கவெளிக்கிடுட்டியளோ' என்பது போன்ற நக்கல் தொனித்தது.

அவர் போக ஆயத்தமானார். எனக்கோ அவரை விட மனமில்லை. இப்படி ஒரு இலக்கியப்பழம் புதிதாக அகப்பட்டுக்கொள்கிறதே! எப்படி விடுவது? வாய் ஊறியது.
அவசரப்பட்டுக்கேட்டேன். 'ஏன் கேட்டனீங்கள்? நீங்களும் ஏதாவது எழுதிறனீங்களோ?'

'இல்லை. படைப்புப்பற்றி ஏதோ கதைச்சுக்கொண்டு நிண்டீங்கள். அதான் ஊரில படையல் வைக்கிறமாதிரி இஞ்சையும் ஏதாவதாக்கம்....' என்று சொல்லிக்கொண்டே கதவைத்திறந்து வெளியேறினார்.
(!)

— சௌமி

www.tamilarangam.net

# கோட்பாடுகளுக்கும்! ஆளுங்களுக்கும்!

யமுனா ராஜேந்திரன்

போதும் நிறுத்திக்கொள்ளெனச்
சொல்லத்தான் போகிறேன்

மத்தியக் குழுத்தீர்மானம்
ஆசிரியர் குழுவின் பிரகடனம்
பெண்ணிலைவாத பிரதிஷ்டம்
அடிப்படை உறுப்பினர் நீக்கப்பிரேரணை
எல்லாமும் எல்லாமும் முடிந்து

இப்போது நீ

சுரங்க ரயில் நிலைய வாசலிலோ
புழுக்கமான விசாரணை அறையிலோ
நள்ளிரவில்
வேலைமுடிந்து வீட்டுக்குத் திரும்பும்
தெருவின் முனையிலோ
எங்கேயும் சாவு காத்திருக்கத்தான்
செய்கிறது

குழந்தைகளிடமிருந்து சட்டம் தகப்பன்களின்
அன்பைக் கருணையற்றுப்பிரிக்கிறது
புரட்சியின் பேரிலும்
ஜனநாயகத்தின்பெயரிலும்
கொலை செய்யலாம்
மூன்றாம் உலகின் கடற்கரை நகர்களில்
ஐரோப்பியர்கள்
பாலகர்களின் பிட்டத்தில் புணர்வதால்
மணலில் உறைந்திருக்கிறது இரத்தக்கறைகள்

கவிதை எழுதுவதைப்பற்றி உன்னிடம்
ஆலோசனை கேட்கவேண்டுமென்று வற்புறுத்துகிறாய்




புத்தன் தேவாலயங்களில் அடைக்கலமான
ஆசைகள் துறந்தோரை
குண்டுகள் பொழிந்து தகர்த்துச்சிரிக்கிறான்
எல்லோருக்கும் புன்னகைக்கும் வெள்ளை
இளம்பெண்
என்முகத்தில் காறி உமிழ்கிறாள்
நிறவெறியர்கள் நைலோன் கயிறுகளுடன்
பனிபெய்து மூடிய புல்தரை மரங்களின் இருட்டில்
எனது தோலின் நிறத்துக்காக
அதிகாலையில் கொல்லக்காத்திருக்கிறார்கள்

மனம் துணுக்குற தோல்வியெனக் கலங்க
மனம் சோர்ந்துவிட ஏதுமில்லை இங்கு
நம்பிக்கை கொள்ள ஏதுண்டு இங்கு?

புகைபோக்கிகளில் அமிலமழை
லெதர் ஜக்கட்டுகளில்
தாசிச்சாலைகளைக் களேபரப்படுத்தும் நாடோடிகளின்
கைகளில்
முயல்களின் இரத்தம் சொட்டும்
வெட்டுண்ட தலைகள்
உடைந்த கண்ணாடிக்குவளைகளில் தெறித்து

www.tamilarangam.net

பிரமாண்டமான லாறிச்சக்கரங்களில்
சக்கையாகின்றன அழுத்தமான நிறங்களில்
மீன்குஞ்சுகள்

புதுக்கடையில் புதைத்த தன்சிசுக்களைப்பற்றி,
குறிப்புப்புத்தகத்தில் எழுதி வைக்கிறாள்
கன்னிமரியாள்
இராமனும் சீதையும் தோண்டியெடுத்து
பாபர்மஜீத்திலிருந்து
பிணங்களைப்புசிக்கிறார்கள்
அரேபியப் பாலைவனங்களில் எஜமானர்கள்
வன்புணர்ச்சிக்கு வராத
சிறுமிகளை கல்லால் அடித்துக்கொல்கிறார்கள்

இப்போது நீ

சகிக்கமுடியவில்லை எனது சுவாச அறைகளில்
உமது அத்தமீறல்களை

தொழிற்சங்கங்கள்
போராடும் தொழிலாளர்களை சட்டபூர்வமற்ற
வேலை நிறுத்தமெனக் கைவிடுகிறது
எனது குறியைக் கையாள்வது குறித்தும் கூட
பிறர் இங்கு ஆலோசனை சொல்வதோ
ஆய்வுக்கட்டுரை தயாரிப்பதோ நடக்கிறது

வாழ்வது குறித்து குற்றஉணர்வுதவிர
நம்பிக்கை கொள்ள ஏதுமில்லை இங்கு

இப்போது நீ

சலித்துவிட்டது போதனைகளும் நியதிகளும்

போதும் நிறுத்திக் கொள்ளெனச்
சொல்லத்தான் போகிறேன்

எனக்கு இந்த உஷ்ணத்தின்
அடயாளம் மற்றும் விடுதலைப்பிரச்சினை
எனக்கென்று
எனக்கென்று நிறுத்தி மூச்சுவிட்டு
விசாலமான அறைச்சுவற்றில் அது சுற்றிவரப்
பார்த்துக்கொண்டே
விரல்களுக்கிடையே கசியும் என்ஜீவ வெப்பம் உணர
ஒரு சின்ன

அழகான வெளிச்சமான அறை.

ஜனநாயகம் பற்றியும் மனித உரிமை பற்றியும்
வானத்துக்கு ஏறிக்கொட்டி முழக்கும்
உனக்கும் சேர்த்துத்தான் இதைச் சொல்கிறேன்

போதும் நிறுத்திக்கொள்ளென

www.tamilarangam.net

# கட்டற்ற சுதந்திரத்தைக்கோரும் பெண்ணியம் ஆணாதிக்கத்தை தக்கவைத்த விபச்சாரத்தினைக் கோருவதே!

சுரிநிகர் 139ல் (ஜன 29- பெப் 11) 'பெண்ணியத்தி)ன் ஒழுக்கம் என்ன? என கேள்வி எழுப்பிய சங்கமனின் ஒரு அலசல் வெளியாகியிருந்தது. பெண் விடுதலை தொடர்பாக டிஸ்கோவின் 'கட்டற்ற சுதந்திரம்' எதுவோ அதை முன்வைத்து அதை நிறுவ தனது வக்கிரமான மார்க்சிய எதிர்ப்புடன்கூடிய கட்டுக்கதைகளையும் அவதூறுகளையும் பொழிந்து தள்ளியுள்ள சங்கமன் இதை ஒரு அலசல்எனபோட்டதன்மூலம் ஊரில் திண்ணை யில்கூடி மற்றவர்களைப்பற்றி இல்லாத பொல் லாததை இட்டுக்கட்டி அலசும் வம்பைத் தான் மீள ஒருமுறை செய்துள்ளார். அந்த அரசியல் வம்பளப்பு அலசல்களைப் பார்ப்போம்.

"மார்க்சீயம் என்ன சொல்லும்?

அதுவும் ஆண்ஆதிக்க முனைப்புக்கொண்ட தத்துவந்தான். அது மட்டுமல்ல மார்க்ஸ் மாதிரி தன் மனைவியைச் சுரண்டியவர் வேறு யாரும் இருக்கமுடியாது.

முழுநேரத்தையும் பிரிட்டிஷ் மியூசியத்தில் கழித்த மார்க்ஸ் தன் உடல் இச்சையைத் தீர்ப்பதற்காகத்தான் மனைவியிடம் வந்தார். அவளைத் தொடர்ந்து கர்ப்பவதியாக்கினார். வறுமையில் வாடவிட்டார். அதுமட்டுமல்ல. தன் உடல் இச்சையைத் தீர்த்துக்கொள்ள ஒரு வைப்பாட்டிச்சியை வேறு வைத்துக் கொண்டார். இதையும் விடக் கேவலமான சுரண்டல்தான் தன்மூலம் வைப்பாட்டிச்சிக்குக் கிடைத்த குழந்தைக்குத் தான் அப்பனென ஏற்றுக்கொள்ள மறுத்தது. அப்படிப்பட்டவரின் தத்துவத்தில் பெண்களை ஆண்கள் சுரண்டுவதுபற்றிய பேச்சை எதிர்பார்க்க முடியாது." என எழுதும் சங்கமன் இதற்கான ஆதாரத்தைத் தரமுடியாத அரசியல் பேடித்தனந்தான் விசித்திரமானது.

எவ்வளவு முடியுமோ அவ்வளவு வக்கிரமாக மார்க்சியத்தை சேறடிக்க முனைகின்றார். சொந்தப் பெயரில் இவைகளை முன் வைக்கமுடியாத இவர்கள் ஏகாதிபத்திய சக்திகளை உறிஞ்சி உமிழும் இவர்கள்தான் பெண்ணியத்தின் முதல் எதிரியாக எம் ஆணாதிக்கத்தினை பாதுகாக்க முனைகி றார்கள்.

மார்க்ஸ் ஆணாதிக்கவாதியெனக் காட்ட முன்வைக்கும் ஆதாரம் முழு நேரத்தையும் பிரிட்டிஷ் முழு நேரத்தையும் பிரிட்டிஷ் மனைவியுடன் இச்சையைத் தீர்க்க மட்டும் வந்துபோனவர். குடும்பத்தை ஏழ்மையில் வாடவிட்டு ஆணாதிக்க சுகம் கண்டவர். இதுதான் சங்கமனின் முதலாவது மார்க்சியம் ஆணாதிக்க தத்துவம் என நிறுவ முன்வைத்த எடுகோள் அருமையிலும் அருமையான பெண்விடுதலைத் தத்துவத்தை வம்பளப்பு அலசலுக்கு ஊடாக தெரிவித் துள்ளார்.

சங்கமன் மார்க்சை கொச்சைப்படுத்தி கூறுவதைப் பார்த்தால் மனைவியை வறுமையில் வாடவிடாது வைத்திருப் பவர்களும், உழைப்பது நாள் பூராவும் மனைவியுடன் கொஞ்சிக் குலாவிக் கொண்டிருப்பவர்கள் ஆணாதிக்க வாதி யில்லை. பெண் விடுதலைவாதிகள் என்கிறார். சங்கமன் எவ்வளவு விசுவாசமாக யாரை பாதுகாக்க முனைகின்றாரெனில் மார்க்ஸ் யாரினை எதிர்த்து தன் வாழ்நாலெல்லாம் போராடினாரோ அந்தக் கனவான்கள்தான் உண்மையான பெண் விடுதலைவாதிகள் எனக்கூறி பாதுகாக்க முனைகின்றார்.

உலகின் மிக மோசமான அடுத்த நேர உணவு என்ன என தெரியாது 100 கோடி மக்கள் வறுமையில் வாடுகின்றனர். இந்தப்பிரிவு முதலாளிக்காக நாள்பூராவும் உழைத்துக் களைத்த நிலையில் தன்னிலையிழந்து மனைவியுடன்கூடி வாழ இடமின்றி பட்டினியோடு வாழும் இம்மனிதர்கள் சங்கமனின் கோட்பாட்டின்படி மேற்குறிப்பிட்ட ஆண்களின் ஆணாதிக்கம் தான் வறுமைக்கும் பெண் ஒடுக்கு முறைக்கும் காரணம் என்கிறாரா?

www.tamilarangam.net

ஈழப்போராட்டம் எழுச்சிபெற்ற காலகட்டத்தில் இளைஞர்கள் இயக்கங்களுக்கு சென்றபோது யாழ்ப்பாணத்து சுயநலம் பிடித்த குட்டி பூர்சுவாக்கள் சுரண்டும் வர்க்கத்தை பாதுகாக்கும் முனைப்பில் என்ன சொன்னார்கள். இதை விட்டுட்டு குடும்பத்தைப் பார்க்கிற வழியைபார் குடும்பத்துக்காக உழை, வயதுபோன பெற்றோரைப்பார், அக்கா தங்கச்சிக்கு உழை என்றார்கள். அப்படி மார்க்கஸ்சும் உழைக்கப் போகவில்லை என்கிறாரோ?

மார்க்சின் எழுத்துக்குள் சங்கமன்போன்ற குட்டி பூர்சுவாக்களின் கோட்பாட்டை அச்சுறுத்துவதால் மார்க்சுக்கு எப்படியாவது ஆணாதிக்க முத்திரை குத்திவிட வேண்டுமென்று முனைந்திருக்கிறார்.

ஒரு ஆண் ஒரு பெண்ணுக்கும் பெண் ஆணுக்கும் அவரவர்களது சுதந்திரத்தைப் பறிக்கும் உரிமை இல்லை. அதைப்போல மார்க்சின் சுதந்திரத்தைப் பறிக்கும் உரிமை மார்க்சின் மனைவிக்கோ சங்கமனுக்கோ கூட இல்லை. அடுத்து மார்க்சுக்கு வைப்பாட்டி இருந்ததெனவும் அப்பெண்ணின் குழந்தையை மார்க்ஸ் தன்னுடையதல்லவென்றும் ஒரு அவதூற்றை முன்வைக்கிறார். இதை யார்மூலம் எங்கிருந்து பெற்றார் என்ற ஆதாரத்தை முன்வைக்க வேண்டும். மாக்சின் தத்துவத்தை எதிர்த்து எழுதியவர்கள் போராடியவர்கள்கூட முன் வைக்காதஒரு அபாண்டமான குற்றச்சாட்டை சங்கமன் வைத்திருப்பது வேடிக்கை.

அடுத்து சங்கமன் முன்வைக்கும் பொன்மொழியைப் பார்ப்போம். "உண்மை மார்க்சீயம் பற்றி எத்தனை எத்தனையோ வியாக்கியானங்களும் வெட்டு ஒட்டுகளும் நடந்து கொண்டிருக்கும்இக்காலத்தில் பெண்ணியமும் மார்க்சியத்துள் சேர்த்துக்கொள்ளப்படுவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. ஆதனால் மார்க்சீயமும் பலமுறும். அத்தோடு பெண்ணியமும் பலமுறும்."

மாக்சியத்தில் எத்தனையோ வியாக்கியானங்கள் ஒட்டுகள் நடக்கிறது என்றுகூறி அதை உயர்த்துவதன்மூலம் ஏகாதிபத்திய கோட்பாடுகளை உயர்த்தி முன்வைக்கின்றார். மார்க்சியம் என்பது என்ன? மார்க்சின் பெயரால் அவர் வைத்த தத்துவம்தான் மார்க்சியம். மார்க்சை மறுத்த தத்துவம் மார்க்சியம் அல்ல. மார்க்சீயத்துக்கு யாரும் திருத்தமோ, சேர்ப்போ ஒட்டோ செய்ய முடியாது. அப்படிச் செய்வதென்பதும் பின் அதை மார்க்சியம் எனவும் அழைக்க முடியாது. அது வேறு ஒரு கோட்பாடுதான்.

மார்க்சியத்தை மார்க்சின் வழியில் மேலும் வளர்த்து எடுக்கமுடியுமேயொழிய மார்க்சின் அடிப்படைக் கோட்பாட்டை நிராகரித்து அல்ல. அவ்வடிப்படைக்கோட்பாட்டின் மேல் நின்றுதான் இவை எல்லாவிதமான தத்துவத்துக்கும் செயல் தனத்துக்கும் வடிவங்களுக்கும் உலகளாவில் பொதுவானது. சரிநிகர் நிறுவனத்துக்கு தான் சொந்தமானதேயொழிய விரும்பிய எவரும் அதன்பெயரில் பத்திரிகை விட முடியாது. சங்கமன் அவர்களே. உங்கள் பெயரில் யாரும் கட்டுரை எழுதமுடியாது அல்லவா? அல்லது உங்கள் பெயரில் உள்ள கட்டுரைக்கு வெட்டு, ஒட்டு வியாக்கியானம் செய்து வெளியிட முடியாது அல்லவா?

சங்கமனது பார்வையில் ஐரோப்பாவில் பெண் விடுதலை கிடைத்துவிட்டது என்கிறார். இன்று ஐரோப்பாவில் தொழில் வசதிகள், விவாகரத்து முறைகள், கல்வி, பாலுறவு போன்றவை ஆணாதிக்க வாதிகள் தங்கள் அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்வதற்காக சில சீர்திருத்தங்களை சலுகைகளை வழங்கியிருக்கின்றனர்.

அதாவது வாக்களிக்கும் உரிமை மறுக்கப்பட்டு இருந்தபோது வாக்கு அளிக்கும் உரிமைபெறின் ஒருவன் சுதந்திர மனிதனாக மாறிவிடுவானா? ஒருக்காலுமில்லை. பெண்கள் ஆண்களைப்போல் எல்லாவற்றிலும் ஈடுபட உரிமை வேண்டுமென போராடும் ஜனநாயகக் கோரிக்கை பெண்விடுதலையாகி விடாது.

இங்கு சங்கமன் பெண் விடுதலை என எதையெடுத்துமுன்வைக்கிறாரெனப் பார்ப்போம். "கட்டற்ற சுதந்திரம்? ஆண் பெண் இரு பாலாரையும் ஒருவரோடு ஒருவர் சேர்த்துவைக்கும் ஒழுக்கக் கோட்பாடும் எதிர்காலத்தில் இதுவாகவே இருக்கும்."

இன்று ஐரோப்பாவில் ஆண் பெண் உறவுமுறைகளில் சிதைவு ஏற்பட்டுள்ளது. மாறாக ஆண் பெண் உறவில் விபச்சார கலாச்சாரத்தை நடைமுறையாக்கியுள்ளது.

www.tamilarangam.net

இன்று சமூகத்தின் பெரும்பகுதி விபச்சாரிகளை நாடிச்செல்வதும் ஒருவரை யொருவர் மாற்றிக் கொள்வதும் கலாச்சார மாக்கிவிட்டது. டீஸ்கோவில் என்ன நடக்கிறது. இதைத்தான் பெண்விடுதலை கட்டற்ற சுதந்திரம் என்கிறார் சுங்கமன்.

ஐரோப்பிய நாட்டுக்கலாச்சாரத்தின் சீரழிவைப் பார்க்கவேண்டுமானால் சிறுவர் சிறுமியர் எப்படி ஓரினச் சேர்க்கைக்கு உட்படுகின்றனர். என்பதை பிரான்சிலிருந்து வெளிவரும் **Liberation** லிபரேசன் என்ற பத்திரிகை 26.02.98 வெளியிட்டுள்ள கட்டுரையிலிருந்து பார்ப்போம்.

ஓரினச் சேர்க்கைக்கு உட்படுத்தப்படும் 15 வயதிற்குட்பட்ட சிறுவர், சிறுமியர் விபரம்.

| யாருடன் | 1985 | 1991 | 1995 |
|---|---|---|---|
| தகப்பன் | 15% | 23% | 27% |
| தாய் | 27% | 31% | 43% |
| சுகோதரன் | | | |
| சுகோதரி | 32% | 44% | 49% |
| பாடசாலையில் | 35% | 43% | 45% |
| நண்பர்கள் | 41% | 56% | 62% |

"தனிச்சொத்து குடும்பம் என்பவையெல்லாம் மான்ய கால தந்தை வழிச்சமூகத்தின் உருவாக்கம் உண்மையான பொதுவுடமை மலர்ச்சியில் அரசு வாடுவதுபோல் இவையும் அற்றுப்போய் விடும் **என்**கிறது மார்க்சீயம். கூடவே இப்பார்வையில் பெண் என்பவள் ஆணொருவனின் சொத்தாகவே போகப் பொருளாகவே கொள்ளப்படுகிறாள். இந்த சொத்தென்ற ஒன்றிலிருந்தே கற்பு போன்ற பல ஆணாதிக்கக் கோட்பாடுகள் பெண்மேல் திணிக்கப்படுகின்றன. இல்லையா? இவற்றின் மூலமே பெண்ணின் அடிமைச் சாசனம் எழுதப்பட ஏதுவாகிறது. மார்க்சீயத்தில் இத்தகைய கருத்துக்கள் இருந்தபோதும் பெண்ணிய நோக்கு அதிக பிரக்ஞைபூர்வமாக இடம்பெறாமையால் அதில் பல முன்னுக் குப்பின் முரண்பட்ட கருத்துக்கள் உள்ளன" என முன் வைக்கும் சங்கமன் மார்க்சியம் ஆணாதிக்கம் கொண்டது என்கிறார். மார்க்சியம் முன்னுக்குப்பின் முரண்படுகிறது என்றுகூறும் இந்தக்கனவான் ஒரு ஆதாரத்தையும் முரண்பாட்டின்மீது முன் வைக்க முடியாதுபோய் உள்ளாகி வார்த்தை வார்த்தையாடல் ஊடேயான சேறடிப்புதான் மிஞ்சியது.

மார்க்சியம் மட்டுமே பெண் பிரச்சினையை அதன் விடுதலைத் தத்துவத்தை மிகச் சரியாக துல்லியமாக ஆய்வு செய்தது மட்டுமன்றி அதற்காக உயிர்த்தியாகம் செய்து போராடுகின்றது. இதுபோல கடந்தகால போராட்டங்கள். வெற்றிகள் அனைத்தின் பின்னும் மிக்க ஆழமான போராட்டங்கள் தியாகங்கள் வெற்றிகள் மார்க்சியத்தைத் தான் புடம்போட்டுள்ளது. வேறு எந்த தத்துவமும் போராட்டமும் கூட உரிமை கோரமுடியாத அளவுக்கு இதன்வெற்றி கோட்பாடு தனிச்சிறப்பம்சமாக இன்றும் மிளிர்கின்றது.

பெண்ணைப் பெண்ணாக அடையாளப் படுத்தியது மார்க்சியம்தான். அடக்கப்பட்ட பெண்ணை அடையாளப்படுத்தியதும் மார்க்சியம் தான். அடக்கப்பட்ட அடிமைப்படுத்தப்பட்ட பெண்ணை முதன் முதலில் ஸ்தானப்படுத்தி வீதியில் இறக்கியது மார்க்சியம் மட்டும்தான் எதிர்காலத்தில் பெண்விடுதலையைப் பெற்றுத் தரும் ஒரேயொரு கோட்பாடு மாக்சியம் மட்டும்தான் ஒழிய வேறு எந்த கழிசடை வண்ணக் கோட்பாடுமல்ல. இவை, பெண்ணை ஆதிக்கமென்ற இடத்தில் இருத்திவைக்கச் சில சலுகைகளை பெற்று சீர்திருத்தம் செய்து ஏமாற்ற மட்டுமே முடியும்.

"அதாவது ஆண்-பெண் இருபாலாரையும் ஒருவர் மற்றவரின் சொத்தாக, போகப் பொருளாக நினைக்க வைப்பதும் அதனால் ஏற்படும் நோக்கால் ஒருவரை மற்றவர் விவகாரங்களில் தலையிட வைப்பதும் இக்கட்டற்ற சுதந்திரத்தால் இல்லாமல் போகிறது. எஞ்சியிருப்பது அன்பு மாத்திரமே. கட்டற்ற சுதந்திரம் என்பது கட்டற்ற அன்பாக (காதலாக)

> மார்க்சை மறுத்த தத்துவம் மார்க்சியம் அல்ல. மார்க்சியத்துக்கு யாரும் திருத்தமோ, சேர்ப்போ, ஒட்டோ செய்ய முடியாது. அப்படிச் செய்வதென் பதும்; பின் அதை மார்க்சியம் எனவும் அழைக்க முடியாது.

மாறலாம். ஆதுதான் ஏற்கெனவே கூறிய கட்டற்ற விடுதலையையும் அதன் வழிவரும் கட்டற்ற அன்பும் இந்தப் பார்வையில் பெண்ணின் எந்த அங்கமும் போகப் பொருளாகவும் ஆபாசமாகவும் பார்க்க படமாட்டாது. மாறாக எல்லாம் அன்பின் உயிர்ப்பாக பார்க்கப்படும்.''

மேலும் சங்கமன் கட்டற்ற சுதந்திரத்தில் அன்பு காதல் எப்படி சுதந்திரமாகச் செயல்படுமென்பதை விளக்க முடியவில்லை. ஏப்படி பெண்ணின் அங்கங்கள் திடீரென ஆபாசமாகப் பார்ப்பது அற்றுவிடும் என விளக்கமுடியவில்லை. மாய மந்திரம் மட்டும்தான் சினிமாகாட்ட உதவும்.

ஐரோப்பிய கட்டற்ற சுதந்திரத்தில் பெண் இன்று எவ்வளவு கேவலமாக மாற்றப் பட்டுள்ளார் என்பதை நடைமுறையில் சுதந்திரமாக தங்குதடையின்றி காணமுடியும். இங்குபெண் பெண்ணுறுப்பு என அனைத்தும் ஏன் அவள்போடும் உடுப்புக்கூட ஆபாசமாக மாற்றப்பட்டு வியாபாரமாக உள்ளது.

ஆண் பெண் உறவுகூட சந்தைப் பொருளாக பண்டமாக மாற்றப்பட்டு விட்டது. காதல் அன்பு சந்தைப் பொருளாக உள்ளது. இன்று ஒவ்வொரு வீட்டிலும் இந்த வியாபாரம்தான் எஞ்சிப் போயுள்ளது.

1915ல் இனெஸ்ஸா அர்மாண்ட் முன்வைத்த 'சுதந்திரமான காதல் என்பதை லெலின் எதிர்த்து இது ஒரு பூர்சுவாக் கோரிக்கையே தவிர பாட்டாளி வர்க்க கோரிக்கையல்ல என்றார்.

கட்டற்ற சுதந்திரம் சுதந்திரக் காதல் சுதந்திர அன்பு என்ற அனைத்துக்கோட்பாடும் பூர்சுவா கண்ணோட்டத்துன்கூடிய இன்றைய திறந்த பொருளாதார கொள்கையின் உலகமயமாதலினை ஊக்குவித்து பாதுகாக்க முனையும் வண்ணக் கலவையாகும்.

இக்கோட்பாட்டை முன்வைப்போர் உண்மையில் மார்க்சியத்தை எதிர்த்து உலகமயமாதலைபாதுகாக்க தமது தீவிர முன் முயற்சியின் ஒரு அங்கமே இக்கட்டுரை. இவர்களின் சொந்த முகங்களை இனம்கண்டு கொள்வதும் அவர்களையும் இக்கோட் பாட்டையும் அம்பலப்படுத்துவது இன்றைய வரலாற்றுக் கடமையாகும்.

- இரயாகரன் -


## வாகன சேவை

**உல்லாசப் பயணங்களுக்கும், சுற்றுலா வைபவங்களுக்கும்**
**9 இருக்கைகளைக் கொண்ட வாகனம்.**
**உங்கள் வீட்டுத் தளபாடங்களை ஏற்றி இறக்கவும்.**
**தொடர்புகளுக்கு:- 01 39 9358 94.**

www.tamilarangam.net

சிறுகதை



சத்தியன்

அந்தமாலைப் பொழுதில்
செயின்நதிக்கரையின் ஓரத்தில்,
விரித்துவிட்டபாயைப்போல
பரவிக்கிடக்கும்புற்பரப்பில் பொருத்தப்பட்ட
அமர்வின்மீது அமர்ந்துகொண்டு
வானத்தையும் தரையையும் பார்த்து
ரசித்துக்கொண்டிருந்தேன்.
குளிர்காலம் முடிந்து வெய்யில்காலம்
ஆரம்பிக்கும் ஒரு பருவகாலமிது.
அமைதியாக ஓடும் அந்த நதிதரும் ஒலி
நல்ல சங்கீதமாக இருந்தது. அந்தச்சிறிய
அலைகள் கட்டுக்களில் வந்து தட்டகிற
சத்தம் இனிய சங்கீதத்திற்கு தாளமாக
இருந்தது. மெல்லென வீசும் அந்தக்காற்று
என்னைத்தழுவிச்செல்ல எனக்கு இதமாக
இருந்தது.
ஆகாயத்தைப்பார்த்தபடி நதியோரக்காற்றை
அடிவயிறுவரை உள்ளே இழுத்து வெளியே
விடுகிறேன். என்ன சுகமாக இருக்கிறது.
இயற்கையையும் சுற்றுப்புறத்தையும்
பார்த்து ரசித்து வியந்துகொண்டிருக்கிறேன்.
என் அமர்வின் அருகில் புல்லுவெட்டும்
இயந்திரத்திற்குத்தப்பிய புற்கள் சில அழகான
வெள்ளைப்பூக்களைப்பிரசவித்திருந்தது.
அப்பூக்கள் காற்றோடு
பேசிக்கொண்டிருக்கின்றன.
சற்றுத்தூரத்தில் மல்லாக்கே படுத்தபடி
ஒருநடுத்தரவயசுப்பெண் புத்தகத்தில்
மூழ்கிப்போயிருந்தாள்.
இன்னும் சற்றுத்தூரத்தில் அழகான
வெள்ளைப்பெண்ணும் கருகருவென்ற
கரும்காளையும் கண்களால்
பேசிக்கொண்டிருந்தனர். இருவரது
சொண்டுகளும் அடிக்கடி
சிக்குப்பட்டுக்கொள்கின்றன. அவர்கள்
இருவரும் காதலர்போலும். நிறம் குலம்
என்ற எல்லாவற்றையம் கடந்து
சுதந்திரப்பறவைகளாகக் காதல்
கொள்கிறார்கள். நான் திரும்பும்
பக்கமெல்லாம் இப்படிப்பல. இந்த நல்ல
சூழ்நிலையை ரசித்துக்கொண்டிருக்கிறார்கள்.
இதமான சூழ்நிலை மனதுக்கு மிகவும்
சுகமாக இருந்தது.

அழகான ஒரு வெள்ளை நாய்க்குட்டி!
அதன் பளபளவென்ற கண்களும்
பஞ்சுபோன்ற சுத்தமான வெள்ளை மயிர்களும்
என்ன அழகு! அதைத்தூக்கி என்மடியிலே
வைத்து வருடவேண்டும்போல் தோன்றியது.
எனக்கு மட்டுமல்ல ஆங்காங்கே இருந்த
எல்லோருக்கும் அப்படி ஒரு! ஆசை வந்திருக்கும்
போல, எல்லோருமே அந்த நாய்க்குட்டியைப்
பார்த்தபடி அவனும் அந்த நாய்க்குட்டியும்
துள்ளித்துள்ளி
விளையாடிக்கொண்டிருக்கிறார்கள். அவன்
பந்து வீசுகிறான். அது பாய்ந்து

www.tamilarangam.net

ஓடிச்சென்று தன் சின்னக்கால்களால் தட்டுகிறது. மீண்டும் அவன் மேலே பாய்கிறது. ஓடுகிறது. சார்க்கஸ் வித்தையெல்லாம் காட்டுகிறது. எல்லோரும் அதன் சாகஸத்தைப்பார்த்த ரசிக்கிறார்கள். எல்லோரும் தன் நாய்க்குக்குட்டியின் விளையாட்டைப்பார்ப்பது அவனுக்குப்பெருமையாக இருக்கிறது போலும். அவன் முகத்தில் பெருமைச்சுகம் தெரிகிறது. சில நிமடங்கள் எல்லோர்மனங்களையும் குளிரவைத்து இருவரும் மறைந்து கொள்கிறார்கள்.

அம்மாவிற்குக் கடிதம் எழுதவேண்டிய அவசியம் இடையிடையே| ஞாபகத்திற்கு வருகிறது இன்றைக்கு நல்ல சூழ்நிலை. இதயம் காற்றைப்போல கனதியில்லாமல் இருக்கிறது. முடிவை எடுத்துவிடவேண்டும். அம்மா எழுதிய கடிதத்தை விரித்து முக்கிய அந்த வரிகளைப்படித்துக்கொள்கிறேன்.

"சாதியும் பொருத்தம், சமயமும் பொருத்தம், சாதகமும் பொருத்தம் நல்லகௌரவமான குடும்பம். பெண் குடும்பப்பாங்கானவள். சீதனப்பிரச்சினைதான் இழுபறியில் இருந்து இரண்டு தரப்பினரும் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தியதால் சுமூகமான தீர்வு ஏற்பட்டுவிட்டது."

ஆனால் எனக்குமட்டும் நெஞ்சில் ஏதோ நெருடல்! முடிவு எதுவும் எழுதாமல் இரண்டுமாதங்களைக் கலைத்துவிட்டேன்.

'நண்பன் சொன்னான் 'மூதேசி முப்பது வயதாப்போச்சு. எத்தின நாளைக்கி தனிய வாழப்போற. வயசு கூடிச்செண்டால் பொம்புள எடுக்கிறது கஷ்டம். கிழண்டினதுக்குப்பிறகு கலியாணம் கட்டி புள்ளபெத்து அது வளரமுந்தி நீ மண்டயப்போட்டிடுவாய். வீட்டுக்காரரே எல்லாம் பேசீட்டினமெண்டால் பேந்தேன் யோசிக்கிறாய். போய்க்கட்டிப்போட்டுவாவன்' அத அவனுக்கு பெரிய அறிவுரையாய்த்தெரிந்து என் எதிர்கால வாழ்க்கையைச்சிறப்பிக்க தனது கடமையாகக்கருதிக்கொண்டான். நான் சிரித்துக்கொண்டு நன்றி தெரிவித்தாலும் எனக்குள் ஒரு மனப்போராட்டமே நடந்தகொண்டிருந்தது. பழையமாதிரி ஒரு சூழ்நிலையில நான் ஊரில இருந்திருந்தால் நானும் இந்தமாதிரித்தான் ஒரு முடிவை எடுத்திருப்பன். ஆனால் இப்ப அது சரிமாதிரித் தெரியயில்லை. காலம் மாற, மாற மனிதன்ர சிந்தனைகளும் மாறுதுபோல. அவன் அதோடு நிறுத்திக்கொள்ளவில்லை. "மனுசி வந்திட்டுதெண்டால் எவ்வளவு நல்லம் தெரியுமா? நீ வேலையால வந்தோண்ண மேசையில சாப்பாடு வரும். ஒரு தலையிடி, காச்சல் எண்டால் பக்கத்தில இருந்து கவனிக்குங்கள். எவ்வளவு நிம்மதி



தெரியுமா? உனக்கு சமைக்கிற வேலையில்லை, உடுப்புத்தோய்க்கிற வேலையில்லை. அவவே உடுப்புத்தோச்சு, அயன்பண்ணி, அலுமாரியில அடுக்கி வைப்பா. நீ ஜாலியா எடுத்துப்போட்டுக்கொண்டு திரியவேண்டியது தான். பிறகு புள்ளகுட்டியெண்டு வாழ்க்கை ஓகோ எண்டுபோகும். மளமளவெண்டு மூண்டுபுள்ளயப்பெத்துவிட்டியெண்டால் அலக்கேஷன் அந்தமாதிரி அள்ளித்தரும்..... உனக்கு குடும்பவாழ்க்கையில காதல் இல்லப்போல கிடக்கு"!

ஒரு ஆணும்பெண்ணும் இணைவது ஏன் என்கிற தத்துவத்தை அப்படியே உதிர்த்தான். அவனது அப்பாவித்தனத்தை நினைத்தபோது அவன்மேல் கோபம் ஏற்படவில்லை. மாறாக அனுதாபம்தான் ஏற்பட்டது.
இந்த திருமண முறைகள் எனக்கு மேலும் அருவெருப்பையே என் உள்ளத்தில் அள்ளி வீசியது.

www.tamilarangam.net

இன்னுமொரு நண்பன் சொன்னான். 'என்ர கலியாணமும் பாங்கொக்கிலதான் நடந்தது. நான் ஒரு கிழமைக்குமுதலே பாங்கொக் போயிட்டன். றியிஸ்ரேசன் நாள் அண்டைக்கித்தான் அவயள் வந்தினம். அவவோட கூட ஒண்டும் கதைக்க நேரமில்லை. அவசர அவசரமா ஓடிப்போய் றிஜிஸ்டர் பண்ணி பிறகு கேக்வெட்டி, எல்லாம் முடிய இரவாப்போச்சு. பிறகு எனக்கும் அவவுக்கும் ஒரு றூமைத் தந்திட்டு அம்மாக்கள் அடுத்த றூமில படுத்திட்டினம். முதல் முறை என்ன கதைக்கிறது எப்பிடிக்கதைக்கிறது? ஓடித்திரிஞ்ச அலுப்புவேற. அவவுக்கும் விமானக் களைப்பு. நித்திரை கொண்டிட்டம். பேந்து அடுத்தநாள் தான் மெல்லக்கதைச்சம். இரண்டு நாளில நான் வரவேண்டி வந்திட்டுது. வேலைவிட்டால் பிறகு எல்லாம் கோவிந்தா.

அவனுடைய அந்த கல்யாணவீட்டு நிகழ்வைக்கேட்டு அவன்மீது பரிதாபப்பட்டுக்கொண்டேன். அவனது கதை எனக்கு ஒரு நிகழ்வை நினைவுக்கு கொண்டுவந்தது.
நான் சிறுவனாக இருக்கும்போது எங்கள் வீட்டில் ஒரு பசுமாடு நின்றது. நல்ல கறவை மாடு. அப்பர் சொல்லுவார் அது நல்ல ராசியான மாடாம். வருடாவருடம் அதனிடமிருந்து பால் எடுக்கவேண்டுமே. எங்கடவீட்டுக்கு கொஞ்சம் தூரத்தில இருக்கிற ஏகாம்பரம் அண்ணன்வீட்டில நல்ல நாம்பன் வளக்கினம். அங்க எங்கட பசுமாட்டைக்கொண்டுபோய் கட்டிப்போட்டு வாறவர். அதுவும் வருசாவருசம் கண்டுபோடும்' இதைபோலதான் இதுவும் இருக்குமோ. இதுக்குப்பேர் கலியாணமோ என் மனதுக்குள் நெருடல்தான்.



என் குடும்பத்தாரின் கணக்கு சரியாக இருந்திருக்கும். ஆனால் எனக்கு இது ஒரு பச்சை வியாபாரமாகத்தெரிகிறது. எங்கள் வீட்டாரின் விருப்பப்படி நான் திருமணம் என்ற பெயரில் இணைந்தால் நண்பன் சொன்னதைப்போல பிள்ளைகள் பிறக்கும் ஒரு பூச்சி புழுக்களைப்போல! எங்கள் வீட்டுப்பசு மாட்டைப்போல!

எனது இன்னொருபக்கம் எமது தேசத்து இளைஞர்களில் அதிகமானோர் இப்படித்தான் என் நண்பன் சொன்னதைப் போல்த்தான் இணைகின்றனர். நான் மட்டும் இதை ஏற்றுக்கொள்ள மறுப்பதென்பதன் விளைவு குடும்பத்தாலும் சமூகத்தாலும் ஒதுக்கப்பட்டு விடுவேனோ? அப்படியானால் என் எதிர்காலம்? நண்பன் சொன்னான் உனக்கு குடும்பவாழ்க்கையில் காதல் இல்லையென்று அப்படித்தான் இருக்கிறேனோ? இல்லை இல்லை நான் பூக்களைக் காதலிக்கிறேன்,
புற்களைக் காதலிக்கிறேன்,
பூச்சிகளைக்காதலிக்கிறேன்,

பூச்சிகளைக்காதலிக்கிறேன்.

காதலை காதலிக்கிறேன். என் நெஞ்சுக்குள்ளே ஒரு உட்கட்சிப்போராட்டமே நடக்கிறது. ஒத்திவைப்பு: சபை கலைதல்: மீண்டும் கூடுதல் போல. ஆனாலும் இப்போதே ஒரு முடிவுக்கு வரவேண்டும்.

நான் மட்டும் ஒரே இடத்தில் அமர்ந்தபடி! அருகே இருந்தவர்கள் சென்ற வேறுபல புதுமுகங்கள் அவ்விடங்களை நிரப்பிக்கொள்கின்றனர். சூரியன் ஓய்வெடுத்துக்கொள்ள மின்சார சூரியன்கள் அவவேலையை பொறுப்பெடுக்கத்தொடங்கிவிட்டன. மின் விளக்குகளின் வெளிச்சங்கள் நீருக்குள் நட்சத்திரங்களாய் மின்னுகின்றன. இரவுப்பொழுது இன்னும் அழகாக இருக்கிறது. இந்த இயற்கையை காலம் முழுதும் ரசித்துக்கொண்டிருகலாமே! அம்மாவுக்கு கடிதம் எழுதத்தொடங்குகிறேன். அன்புள்ள அம்மாவுக்கு......

www.tamilarangam.net




# டைட்டானிக்

# TITANIC

— தி. உமாகாந்தன் —

இந்த நூற்றாண்டு முடிவதற்கு இன்னும் சில காலமே இருக்கையில் நெஞ்சுக்குள் நிற்கும் ஒரு அற்புத திரைப்படத்தை ஜேம்ஸ் கமரோன் **(James Kameron)** உலகத் திரைப்பட இரசிகர்களுக்கு வழங்கியிருக்கிறார். TITANIC– டைட்டானிக் இன்று உலகத்தை தன் வசப்படுத்தியிருக்கும் திரைப்படம். இளைய சமூகத்திலிருந்து முதியோர் வரை டைட்டானிக் மேனியாவுக்குள் சிக்க வைத்திருக்கும் படம். பிரம்மாண்டம் என்பதின் அர்த்தத்தை டைட்டானிக் என்று மாற்றி விடலாமா என்று ஹொலிவூட்டை யோசிக்க வைத்திருக்கும் படம்.

இத்தகைய பிரம்மாண்டமான திரைப்படங்களைப் பார்க்கச் செல்லும் இரசிகர்கள் பிரம்மாண்டத்தைப் பிரம்மாண்டமாகக் கற்பனை செய்து விடுகிறார்கள். அதனால் படம் பார்த்து முடியும் போது இவ்வளவு தானா? என்ற உணர்வு ஏற்பட்டு இரசிகர்கள் தளர்ந்து விடுகிறார்கள், அல்லது இந்தப் பிரம்மாண்டம் ஏன் என்று புரிந்து கொள்ள முடியாமல் இரசிகர்கள் களைப்படைகிறார்கள். விளைவு படம் வர்த்தக ரீதியாகத் தோல்வியடைகிறது அல்லது வர்த்தகரீதியாக வெற்றியடைந்த போதும் இரசிகர்களின் மனங்களை வெல்வதில் தோல்வியடைகிறது. இரசிகர்கள்

www.tamilarangam.net

திரைப்படம் பார்த்துவிட்டு வெளியேறும் போது திரையரங்கினுள்ளேயே அப்படம் பற்றிய உணர்வுகளையும் விட்டுவிட்டு வெளியேறிவிடு கிறார்கள்.

ஆனால் ஜேம்ஸ் கமரோன் என்ற அற்புதக் கலைஞன் அழகியலையும், அறிவியலையும் இணைத்து டைட்டானிக் ஆக்கி திரைக் கடலில் மிதக்க விட்டிருக்கிறார். ஒரு உண்மைக் கதையையும், கற்பனைக் கதையையும் இணைத்து திரைப்படம் உருவாக்குவது என்பது கம்பி மேல் நடப்பது போன்றது. கரணம் தப்பினால் மரணம் என்ற இந்த விஷப் பரீட்சையில் ஜேம்ஸ் கமரோன் வெற்றிக் கொடி நாட்டியுள்ளார்.

1912ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 10ம் திகதி இங்கிலாந்தின் சவுத்தாம்ரன் **(Southampton)** துறைமுகத்திலிருந்துபுறப்பட்டது டைட்டானிக் என்ற பாரிய உல்லாசக் கப்பல். நிர்மாணத்தின் போதே பெரும் புகழ் பெற்ற இக் கப்பலின் முதலாவது ஓட்டத்தின்போது பயணம் செய்வது தமது அந்தஸ்த்தின் சின்னம் என இங்கிலாந்தின் உயர் மட்டம் நினைத்ததால் அவர்களிடையே இப்பயணத்திற்கு கடும் போட்டி இருந்தது. கப்பல் தன் பயணத்தை ஆரம்பித்த போது 891 கப்பல் பணியாட்களும் 1316 பயணிகளும் கப்பலில் இருந்தனர். கப்பலில் மேல்தட்டுவர்க்கத்தினர் மேல் தளத்திலும், நடுத்தர வர்க்கத்தினர் இரண்டாம் தளத்திலும், தொழிலாள வர்க்கத்தினர் மூன்றாவது தளத்திலும் பயணித்தனர்.ஆட்டம், பாட்டு, உல்லாசக் கேளிக்கைகளுடன் டைட்டானிக்கின் பயணம் தொடர்கையில் ஏப்ரல் 14ம் திகதி காலையில் "கப்பல் பாதையிலே ஐஸ் பாறைகள்–கவனம் செலுத்தவும்!" என்று வந்த ரேடியோ செய்தி கப்பல் பணியாளர்களால் அலட்சியப்படுத்தப்பட்டது. விளைவு அன்று இரவு பதினொன்று நாற்பது மணிக்கு கப்பல் ஐஸ் பாறையில் மோதியது. இரண்டு மணித்தியாலம் நாற்பது நிமிடத்திற்குள் டைட்டானிக் கடலுக்குள் முற்றாக மூழ்கி விட்டது. எழு நூற்றி ஐந்து பேர் மட்டுமே காப்பாற்றப்பட்டனர். மீதிப்பேரை கடல் அரவணைத்து விட்டது– இது உண்மைக் கதை.

டைட்டானிக்கில் முதல் வகுப்பில் பிரயாணம் செய்யும் பதினேழு வயது கோடீஸ்வர அழகுப் பெண் ரோஸ். அவளுக்கு செல்வந்த வாழ்க்கை மீது வெறுப்பு. அவள் விருப்பத்திற்கு மாறாக இன்னுமொரு செல்வந்தனுக்கு மணம் செய்ய நிட்சயித்திருக்கும் அவளது தாய். அழகுணர்வில்லாத ஒருவனை திருமணம் செய்வதை விட தற்கொலை செய்வதே மேல் என முடிவெடுக்கும் ரோஸை, கீழ்தட்டில் பிரயாணம் செய்யும் ஜக் டாஸன் தடுக்கிறான். இருவருக்குமிடையில் காதல் நுழைகிறது. ஜக் டாஸன் அழகிய இளைஞன் மட்டுமல்ல ஒரு ஓவியனும் கூட. அவனது



ஓவியங்கள் மட்டுமல்ல அவனும் அவளைக் கவர்ந்துவிட கப்பலுக்குள்ளேயே காதலும் வளர்கிறது. உள்ளத்தால் மட்டுமல்ல உடலாலும் இருவரும் இணைகின்றார்கள். இரு உள்ளங்களுக்குமான இரகசியக் காதல் கப்பலுக்குள் பரகசியமாகிறது. காதலர்கள் கப்பலுக்குள்ளேயே பிரிக்கப்படுகிறார்கள். காதலன் கை விலங்கிடப்படுகிறான். தொடர்ந்து கப்பல் ஐஸ் பாறையில் மோதுகிறது. காதலன் கடலினுள் மூழ்குவதை காதலி தன் கண்களால் பார்க்கும் கொடுமை– இது கலக்கப்பட்ட கற்பனைக் கதை.

இந்தக் கற்பனைக் கதை ஒரு சாதாரண சினிமாவின் நாயகன், நாயகி இதில் யாரோ ஒருவர் மேல்தட்டு, மற்றவர் கீழ்தட்டு. இருவருக்குமிடையிலான காதல் மலர்வு, பின்னர் வில்லன், பிரிவு, சோகம் என்ற வழமையான கதைதான். ஆனால் இதைக் கலந்த விதம் அபாரம். இரசிகர்களைக் கவர்வதற்கு பிரமாண்டம் மாத்திரம் போதாது எப்போதுமே உலகம் ஏற்றுக் கொள்ளும் காதலும் தேவை. என்று ஜேம்ஸ் கமரூன் கணக்குப் போட்டது தப்பவில்லை. கோடிக்கணக்கான இரசிகர்கள் இந்தக் கலப்புக் கதையுடன் ஒன்றிவிட்டார்கள். அது மட்டுமல்ல காதலையும், ஒரு உண்மைக் கதையையும் மாத்திரம் கலந்ததுடன் ஜேம்ஸ் கமரூன் ஓய்ந்து விடவில்லை. வர்க்க வேறுபாடுகளையும் மிருதுவாக எடுத்துக் காட்டுகிறார். முதல் தளத்திற்கும் மூன்றாம் தளத்திற்குமிடையிலான அரங்க அமைப்பு வேறுபாடுகள், நாயகன் முதல் தளத்தை பார்க்க விரும்பும் போது மூன்றாம் தளப் பிரயாணிகள் இங்கே நுழையக் கூடாது. ஏனெனில் அவர்கள் உடலில் உள்ள கிருமிகள் இங்கே பரவிவிடும் என்று கப்பல் பணியாளர்களால் தடுக்கப்படும் போது வெளியாகும் மேல்தட்டு வர்க்கத்தின் மூர்க்கம், உண்மையான சந்தோசத்தை நீ மூன்றாம் தளத்தில் வந்து பார்

www.tamilarangam.net

என்று கோடீஸ்வரக் காதலியை தொழிலாளர் கொண்டாட்டத்திற்கு நாயகன் கூட்டிச் செல்லும் போது அவள் அனுபவிக்கும் வித்தியாசமான சந்தோச உணர்வுகள் எல்லாமே வர்க்கங்களின் வெளிப்பாடுகள் மாத்திரமல்ல மனித உணர்வுகளின் வெளிப்பாடுகளும் கூட. போலித்தனமான பாவனைகளை முகத்தில் காட்டி போட்டி போடும் குணத்தை மனதில் அடக்கும் மேல்தட்டு வர்க்கத்தையும், பாவனைகள் எதுவுமற்று பரவசங்களை பகிர்ந்து கொள்ளும் கீழ்தட்டு வர்க்கத்தின் உணர்வுகளையும் பாரிய அளவில் மக்கள் ஏற்றுக் கொள்வது படத்தின் வெற்றிக்கான இன்னுமொரு காரணமாகும்.

ஜேம்ஸ் கமரூன் இந்த டைட்டானிக் வரலாற்றை மில்லி மீற்றர் மில்லிமீற்றராகப் படித்து கடலுக்குக் கீழ் ஆய்வு செய்து தொழில்நுட்ப ரீதியாக ஒரு அற்புத சாதனை படைத்துள்ளார். படம் ஆரம்பித்தவுடன் படத்துடன் இரசிகர்களை ஒன்றி விடச்செய்து விட்டது ஜேம்ஸ் கமரூனின் திறமை. உண்மையான டைட்டானிக் கப்பலை அப்படியே கண் முன் கொண்டு வந்தது ஓர் அசுரசாதனை. ஐஸ் பாறையில் கப்பல் மோதியவுடன் கடல் நீர் கப்பலினுள் புகுவதையும், கப்பல் மெல்ல மெல்ல மூழ்குவதையும் ஜேம்ஸ் கமரூன் காட்டிய விதம் அவரது தொழில்நுட்ப அறிவின் சிறப்பு என்றால், கப்பல் மூழ்கும் போது பயணிகள் ஒவ்வொருவருக்கும் தத்தமது உயிரைக் காப்பாற்றுவதைத் தவிர வேறு எதுவும் அவசியமாயிருக்கவில்லை. உயிரின் மீது ஆசை கொண்ட மனிதர்களின் துடிப்பைக் காட்டி உயிராசையின் முன்னால் பணம், நட்பு, பாசம், நாகரீகம் எல்லாமே அர்த்தமற்றதாகிவிடும் என்ற மனித உணர்வைப் படித்து அப்படியே படம் பிடித்துக் காட்டியது அவர் வெறும் இயந்திரமனிதனல்ல என்பதைக் காட்டி யிருக்கறது. கப்பலில் பயணம் செய்து உயிர தப்பிய நாயகி றோஸ், இப்பொழுது 102 வயதாகி கப்பலிலிருந்து காப்பாற்றப்பட்ட ஓவியம் ஒன்றைப் பார்த்து தனது பழைய காதல் கதையை –டைட்டானிக் கதையை சொல்வதாகக் காட்சிகளை அமைத்தது ஜேம்ஸ் கமரூனின் இன்னுமொரு திறமை.

ஜேம்ஸ் கமரூனின் அடுத்த திறமை பளிச்சிட்டிருப்பது பாத்திரங்களுக்கான நடிகர் தேர்வுகளில். கதை சொல்லும் **க்ளோரியா ஸ்ருவர்ட்**, சாமான்ய இளைஞனாக இன்றைய ஹொலிவூட் இளவரசன் **லியனார்டோ டிகாப்ரியோ**, நாயகி **கதி வின்ஸ்லோ**, கப்டனாக **பேர்னார் ஹில்**, இசைக் குழுவின் கலைஞர்கள், கப்பல் பணியாளர்கள், கோடீஸ்வரர்கள் எல்லாமே அளவெடுத்த மாதிரியான தேர்வு. செலுலோய்டில் நிஜத்தின் பிரதிபலிப்பு.

கமராக்கள் அள்ளித்தரும் காட்சி விருந்து கம்பியூட்டர் கிரபிக்ஸ் வித்தைகள் எல்லாமே படம் பார்க்கும் போது எங்கே ஒரு காட்சி தப்பிவிடுமோ என்று கண் இமைப்பைத் தடுக்கிறது என்றால், ஜேம்ஸ் கார்னரின் இசை நெஞ்சுக்குள் தென்றலாய் தவழ்கிறது.

ஜேம்ஸ் கமரூன் ஒரு சர்வாதிகாரி, பிடிவாதக்காரன், பட்ஜெட்டை மீறிப் படம் எடுப்பவன், அவரது திமிர்த்தனத்திற்குப் பாடம் கற்பிக்கும் வகையில் உண்மைக் கப்பலைப் போலவே இந்த டைட்டானிக் திரைப்படமும் கடலினுள் மூழ்கப் போகிறது என்ற ஹொலிவூட் வாழ்த்துக்களுடன் படம் வெளியாகியது.

ஒரு கலைஞனின் உழைப்பிற்கு, ஒரு கலைஞனின் திறமைக்கு உலகம் மதிப்பளித்தது. கௌரவம் கொடுத்தது. அவசரமாக ஓடும் உலகில் இயந்திரங்களாக இயங்கும் மனிதர்களை இந்த மூன்று மணித்தியாலங்கள் இருபது நிமிடங்கள் ஓடும் படம் கட்டி வைத்தது. பொறுமையாகப் பார்த்தார்கள், படத்தோடு ஒன்றினார்கள், கண் கலங்கினார்கள், படம் முடிகையில் எழுந்து நின்றார்கள், கை தட்ட மறந்தார்கள், கலங்கிய கண்களுடன் இறுகிய முகத்துடன் டைட்டானிக்கை நெஞ்சுக்குள் புதைத்துக் கொண்டு வெளியேறினார்கள். திரும்பவும் டைட்டானிக்கை பார்க்க வருகிறார்கள். நெஞ்சில் சுமக்கிறார்கள்.

இளம் இரசிகர்கள், முதியவர்கள் என்ற பேதமின்றி அமெரிக்கா, ஐரோப்பா, ஆசியா என்ற பேதமின்றி இப்போது உலகெங்கும் டைட்டானிக் அலை வீசுகிறது. 200 மில்லியன் டொலர் செலவில் தயாரான இப்படம் மூன்று மாதங்களில் உலக அரங்கில் சம்பாதித்திருப்பது 1.2 பில்லியன் டொலர்களைத் தாண்டி விட்டது. இந்தப் படத்தை தயாரிப்பதற்காக ஒவ்வொரு நிமிடத்திற்கு 1 மில்லியன் டொலர் செலவிடப்பட்டிருக்கிறது. இந்தப் படத்தில் 6 ஆயிரத்து 29பேர் பங்கு கொண்டிருக்கிறார்கள். பிரான்ஸில் இது வரை இப் படத்தை (மூன்று மாதங்களில்) 15.8 மில்லியன் மக்கள் பார்த்துள்ளனர். பிரான்ஸில் இது வரை வெளியான படங்களில் அதிகம் பேர் பார்த்த திரைப்படம் 1966ம் ஆண்டு வெளியான "LA GRANDE VADROUILLE "ஆகும். இந்தப் படத்தை ஒரு வருடத்தில் 17.2 மில்லியன் மக்கள் பார்த்தார்கள். டைட்டானிக் மூன்று மாதங்களில் அமெரிக்காவில் வசூலித்திருப்பது 471 மில்லியன் டொலர்களை. ஐரோப்பாவில் 350 மில்லியன் டொலர்கள் மூன்று மாதங்களில் கிடைத்திருக்கிறது.

டைட்டானிக்கை வசூல் மழை மட்டும் குளிப்பாட்டவில்லை. ஆஸ்க்கார் பரிசு மழையும் டைட்டானிக்கை பன்னீர் குளிப்பாட்டுக்கு உள்ளாக்கி இருக்கிறது. 14ஆஸ்க்கார் பரிசுகளுக்கு சிபாரிசு செய்யப்பட்ட டைட்டானிக் 70 வது ஆஸ்க்கார் பரிசளிப்பு விழாவில் 11 ஆஸ்கார்

www.tamilarangam.net



விருதுகளைப் பெற்றிருக்கின்றது. இது பென்ஹர் படத்துக்குக் கிடைத்த இணையான விருதுக ளாகும். சிறந்த படம், சிறந்த டைரக்ஸன், சிறந்த கமராமென் என்ற மூன்று விருதுகளும் ஜேம்ஸ் கமரூனை இந்த நிமிடத்தில் நானே உலகின் மன்னன் என குதூகலிக்க வைத்தது. அது மட்டுமா அரங்க அமைப்பு, திரைக்கதை அமைப்பு, ஒலி அமைப்பு, விஷேட ஒளிக்கையாள்கை,"MY HEART WILL GO ON" என்ற டைட்டானிக் பாடல், விஷேட காட்சி அமைப்புக்கள், எடிற்றிங், விசேட ஒலி அமைப்பு ஆகிய ஆஸ்கார் பரிசுகள் டைட்டானிக் படத்திற்கு அள்ளி வழங்கப்பட்டுள்ளன.

உண்மைச் சம்பவம், கற்பனையான காதல் கதை, காரத்திற்கு கொஞ்சம் வர்க்க முரண்பாடுகள், நளினமான இசை, தேர்ந்த நடிப்பு, அற்புதமான தொழில்நுட்ப சித்து விளையாட்டுகள் அனைத்தும் கலந்த டைட்டானிக்கை அகலத்திரையில் அற்புத ஒலி அமைப்புடன் திரையரங்குகளில் பார்த்து இரசிக்கும் சந்தர்ப்பத்தை நமது இரசிகர்கள் இழந்து விடக் கூடாது.

நியூயோர்க் டைம்சின் சினிமா விமர்சகர் ஜீனட் மஸ்லின் டைட்டானிக் தொடர்பான தமது விமர்சனத்தில் இப்படிக் குறிப்பிடுகிறார். ஜேம்ஸ் கமரூனின் டைட்டானிக் இந்த தசாப்தங்களின் உன்னதமான படம். பிரம்மாண்டம், விறுவிறுப்பும் நிறைந்த இத் திரைப்படம் தொலைந்து போன உலகின் அழகுக்குள்ளும், நெஞ்சு உருகும் சோகத்தினுள்ளும் இரசிகர்களை மூன்றேகால் மணி நேரம் மூழ்க வைக்கிறது. அது மட்டுமல்ல நடிகர்கள், நடிப்பு பற்றி குறிப்பிடுகையில் நடிகர்களுக்குள் நடைபெற்ற அற்புதமான இரசாயனத்தின் வெளிப்பாடு என்று கூறுகின்றார். ஒரு சாதாரண இரசிகனாய் இந்தக் கூற்றில் நானும் உடன்படுகிறேன். ■

ஜேர்மனியில் எந்தத் தொலைதூரமானாலும்
குறித்த நேரத்தில், குறித்த தவணையில்
சிறந்த முறையில் வீடியோ பதிவு செய்திட

**நவீன்ஸ் வீடியோ லாண்ட்**

**C. SATHA**
Futter Str 14
661 1 1 Saarbrücken
Tel : 0681 / 37 60 62



www.tamilarangam.net

# ஒரு குறுந்திரைப்படம்

## கொஞ்சம்பேர் சில மணித்தியாலங்கள்

-அழகு குணசீலன்-

தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஏற்பட்ட வளர்ச்சி கலை, இலக்கியத் துறையில் நீண்டகாலமாக இருந்து வந்த ஒரு போலியான தமிழ்க் கலை இலக்கிய மரபைச் சிதைத்தது. மூன்றாந்தர தமிழ்ச் சினிமாவுக்கும், வர்த்தகப் பத்திரிகைகள், சஞ்சிகைகளுக்கும் இருந்த முக்கியத்துவம் இழக்கப்பட்டது. இதன் மூலம் பல மாற்றுக் கலை இலக்கியப் படைப்புக்கள் ஈழத்திலும், புலம்பெயர்ந்த நாடுகளிலும் புதிய பரிமாணங்களைக் கொண்டு வெளி வந்தன. இந்த வரிசையில் அண்மையில் சுவிஸில் வெளி வந்துள்ள ஒரு குறும்படம் **முடிவல்ல...**

பிரான்ஸ் தமிழர் கலை பண்பாட்டுக் கழகம் மாவீரர் நாளையொட்டி ஏற்பாடு செய்திருந்த ஒரு போட்டிக்கான படைப்பாக இது இருந்தாலும், தமிழ்க் குறுந்திரைப்பட வரலாற்றின் ஒரு அடிப்படையாக அமைந்துள்ளது என்று கொள்ளலாம்.

சுவிஸின் சூரிச் நகரில் இந்தப் படம் தொடர்பாக கொஞ்சப் பேர் கூடி, சில மணித்தியாலங்கள் ஒரு காத்திரமான பார்வையை வைத்தனர். ஈழத்தின் யுத்த நெருக்கடிகளில் இருந்து பெற்றோரின் வற்புறுத்தலினால் அந்நிய நாட்டுக்கு -சுவிஸிற்கு புகலிடம் தேடி வரும் மூவரின் கதை இது. அவர்களை ஏமாற்றும் ஏஜன்சிக்காரர், அவர்கள் எல்லையை கடத்தல், அவர்களின் மன வெளிப்பாடுகளை இது காட்டுகின்றது. அந்த மூவரில் இருவர் இளைஞர்கள், மற்றவர் ஒரு யுவதி. எல்லையைக் கடந்து சுவிஸிற்குள் நுழைந்ததும் அவள் தனது வருங்காலக் கணவனுடன் தலைமறைவாக, அந்த இரு இளைஞர்களும் பொலிஸில் மாட்டிக் கொள்கிறார்கள். **முடிவல்ல...** என்ற அந்தக் குறுந்திரைப்படத்தின் கதைச் சுருக்கம் இது தான்.

ஒட்டுமொத்தமாக இருபது நிமிடங்கள் இந்தப் படத்தைப் பார்க்கும் போது ஒரு முழு நீளப் படத்தைப் பார்த்தது போன்ற கனதி ஏற்படுகின்றது. ஆனால் கதை, திரைக்கதை, நெறியாக்கம், ஒலி, ஒளி, பாத்திரப் படைப்பு என்ற பல விடயங்களை உன்னிப்பாகப் பார்த்தால் பல இடங்களில் தொய்வுகள் தெளிவாகத் தெரிகின்றன.

பார்ப்பதற்கு அசல் அகதிகளாகவே தெரிகின்ற அந்த மூவரும், சுவிஸிற்கு வருவதற்காக மற்றொரு ஐரோப்பிய நாடொன்றில் ஒரு தமிழர் வீட்டில் தங்க வைக்கப்படுகின்றனர். அந்த வீட்டில் வீட்டுக்காரர் குணசேகரனுடன் வசிக்கும் மற்றொரு நபரும் உள்ளார்.

குணசேகரன், அகதிகள் மற்றய நபர் இவர்களுக்கிடையான உரையாடல்கள் படத்திற்கு கனதியைத் தருகின்றன. ஒரு சந்தர்ப்பத்தில் குணசேகரன் அகதிகளான சங்கர், சிவா என்ற இளைஞர்களிடம் இப்படிக் கேட்கிறார். தம்பியவை என்ன குடிக்கிறீர்கள்? அவர்கள் ஆளை ஆள் பார்க்கிறார்கள். பதில் இல்லை. அவர் மீண்டும் கேட்கிறார், யூஸ் குடிக்கிறீர்களே? ஏஜன்சி எப்ப வருவார்? நாளைக்குப் போகலாமே? என்று அவர்கள் தங்கள் ஆதங்கத்தைப் பதிலாக அளிக்கி றார்கள்.

குணசேகரன் நம்பிக்கைக்கும்- நம்பிக்கையீனத்துக்கும் இடையில் தவிக்கும் ஒரு பாத்திரமாகக் காட்டப்பட்டுள்ளார். அவரோடு வாழும் மற்றவர் நகைச்சுவைப் பாணியில் கதைத்தாலும் முழு உண்மையைச் சொல்லுகிறார். ஏஜன்சிக்காரர்களின் திருகு தாளங்கள், சுவிஸ் நிலமை போன்ற விடயங்களை அவர் சொல்லும் போது அவை உண்மையாக இருந்தாலும் அந்த இளைஞர்களுக்கு நம்பிக்கையூட்டுவதற்காக குணசேகரன் மிகவும் கச்சிதமாகப் பேசுகிறார். உண்மையில் இரு முரண்பாடான பாத்திரங்கள் இங்கு நன்கு சித்தரிக்கப்பட்டுள்ளன.

தமிழ் யுவதியொருவரை அந்த வீட்டுக்கு அழைத்துவரும் ஏஜன்சிக்காரன் சொல்லும் பொய்கள் நன்கு சித்தரிக்கப்பட்டுள்ளன. அவர்கள் எல்லையைக் கடக்கும் போது காட்டுக்குள்

www.tamilarangam.net

காத்திருக்கிறார்கள். அப்போது அந்த இளைஞர்களில் ஒருவரின் சிந்தனை இப்படி ஓடுகிறது. இப்படிக் கஷ்டப்பட்டு ஒழித்து காட்டுக்குள் இரவுகளைக் கழிப்பதாய் இருந்தால் அங்கேயே இருந்திருக்கலாம். அங்கும் ஓட்டமும், ஒழித்தலும், பங்கரும் தானே வாழ்க்கை. அப்பா, அம்மா விட்டார்களா? இதை விடவும் இயக்கத்தில் இணைந்து மாவீரராகி இருக்கலாம் என்று நினைக்கிறார்! .

இங்கு ஒரு சந்ததி இடைவெளி மனப்போக்கு காட்டப்பட்டிருந்தாலும், அந்த முடிவுக்கு அவர் வருமளவுக்கான கஷ்டங்கள் காட்டப்படாதது ஒரு பெரும் குறையாக உள்ளது இதனால் அவர்கள் சொல்ல வந்த கருத்தின் கனதி குறைந்து விடுகிறது. எல்லையைக் கடந்து அவர்கள் நிற்கும் போது இளைஞர்களுக்குச் சொல்லாமலே அந்த யுவதி, தனக்குரிய ஏற்கனவே சுவிஸில் வாழும் இளைஞனுடன் தலைமறைவாகி விடுகிறார். இதை ஜீரணிப்பது மிகவும் கஷ்டமாக உள்ளது. ஏனெனில் அந்த மூவரும் மிகவும் நெருக்கமான நண்பர்களாகப் பழகுவது முன்னய காட்சிகளில் துல்லியமாகக் காட்டப்பட்டிருந்தது.

அவளைப் பிரிந்த அந்த இளைஞர்களைப் பயம் ஆட்கொள்கிறது. அவர்கள் தொலைபேசி அழைப்பொன்றை எடுக்க முயற்சிக்கும் போது அங்கு வரும் ஒரு மனிதர் அவர்களைப் பிடரியில் பிடித்துத் தள்ளிக் கொண்டு போகின்றார். அவர்கள் பரிசோதனைக் குட்படுவது காட்டப்படும் வரை அந்த மனிதர் பொலிஸ்காரர் என்ற எண்ணம் எந்தப் பார்வையாளருக்கும் ஏற்படவில்லை. இது மிகப் பெரிய குறைபாடாகவுள்ளது. பாத்திரப் பொருத்தம் இந்த இடத்தில் சற்றும் இல்லை. இப்படி முடிவல்ல.... முடிவடைகின்றது .

எல்லா நடிகர்களுமே தமது பாத்திரப்படைப்பை சிறப்பாகச் செய்து இருக்கின்றார்கள். பொலிஸ் பாத்திரம் மட்டும் ஒரு பெறுமதியற்றதாகப் போய்விட்டது.

முடிவல்லவில் கதை நகர்த்தப் படுகின்றதேயன்றி, கதை சிதைக்கப்பட்டு ஒரு மாற்றுப் பரிமாணங்கள் எங்கும் காட்டப்படவில்லை. காட்சிகள் கூட ஆரம்பம் முதல் முடிவு வரை தொடர்கின்றனவேயன்றி நெறியாள்கையின் மூலம் வித்தியாசமாக எதையும் காண முடியவில்லை. சினிமாவில் பெருங் கதைக்குள் சாராம்சம் ஒன்றை நாம் தேட வேண்டும். ஆனால் குறுந்திரைப்படம் என்பதே சாராம்சம் தான் என்பது கவனத்தில் கொள்ளப்படவில்லை.

புகலிடத்தில் தயாரிக்கப்பட்ட பல சினிமாக்கள் வெறும் சம்பவங்களின் தொகுப்பாகவே இருந்துள்ளன. இந்தக் குற்றச் சாட்டுக் குறைந்த ஒரு திரைப்படம் முகம் என்று சொல்லலாம்.

ஆனால் சம்பவங்களின் தொகுப்பாகவன்றி சினிமாவில் இருந்து விடுபடும் வாய்ப்பு குறும் படத்திற்கே உண்டு. இங்கு சம்பவங்களின் கோர்வை வெளிப்படுகின்றது. குறுந்திரைப் படம் என்பது ஒரு கவிதை போன்றது. அதை ஒரு கமராக் கவிதை என்று கூடச் சொல்லலாம். பாலுமகேந்திராவின் **அழியாத கோலங்கள்** ஓரளவு இந்தத் தன்மையைக் கொண்டிருந்தது என்பதை இங்கு சுட்டிக் காட்ட முடியும்.

**புகலிடத்தில் தயாரிக்கப்பட்ட பல சினிமாக்கள் வெறும் சம்பவங்களின்தொகுப்பாகவே இருந்துள்ளன. இந்தக் குற்றச் சாட்டுக் குறைந்த ஒரு திரைப்படம் முகம் என்று சொல்லலாம்.**

நெறியாள்கை, தொழில் நுட்பம், ஒலி, ஒளிப் பதிவுகள், இசை என்பன தொடர்பாக திருத்தப்பட வேண்டிய விடயங்கள் ஏராளம் உண்டு. மொத்தமாக இவை அனைத்தும் தொழில் நுட்பம் சார்ந்த குறைபாடுகளாகவே உள்ளன. கமராவின் மூலம் மிகவும் துல்லியமாகக் காட்டக் கூடிய சில நிகழ்வுகள் இருந்தும் அவை சுட்டிக் காட்டப்படாதது பெரும் குறையாகவுள்ளது. காலை, மாலைக் காட்சியொன்றை செயற்கையாக நிறக்கலவையைப் பயன்படுத்திச் செய்திருப்பது குறிப்பிடக் கூடிய ஒன்று எனலாம். பல இடங்களில், வெவ்வேறு இடங்களில் செய்யப்பட்ட பதிவுகள் ஒன்றிணைக்கப்படும் போது ஏற்பட்ட தொழில் நுட்பப் பலவீனங்களை மறைக்க முடியாமல் படைத்தவர்கள் மாட்டுப்பட்டுள்ளனர். சுவிற்சலாந்தின் சுயம் படைப்பகம் என்ற அமைப்பின் முதலாவது முயற்சியாக இது இருந்தாலும் தவறுகள் சுட்டிக் காட்டப்பட வேண்டியது தவிர்க்க முடியாது.

எப்படியாயினும் முடிவல்ல படக்காட்சியும், விமர்சனமும் அங்கு வந்திருந்த அந்தக் கொஞ்சப் பேரையும் சில மணித்தியாலங்கள் அப்படியே அசையாமல் அமரச் செய்து விட்டது. மண்டபம் நிறைந்த மக்கள் கூட்டங்கள் என்று கூறி, எருமையின் முதுகில் பெய்த மழையாக பல கலை இலக்கிய நிகழ்வுகள் வீணாகிப்போகின்ற புகலிட வாழ்வியலில் அந்தக் கொஞ்சப் பேரின் வருகை அதுவும் கலை, இலக்கியத் துறையில் ஆர்வம் உள்ளவர்களின் அந்த வருகை நிகழ்ச்சியின் பரிமாணத்தை அதிகரிக்கச் செய்திருந்தது.

www.tamilarangam.net

ஒரு குறுந்திரைப் படத்தின் மிகப் பெரிய விமர்சன அரங்காக அதனைக் கொள்ள முடிந்தது. ஈழத்தில் தயாரிக்கப்பட்டுள்ள **காற்று வெளி, இனி செவ்வரத்தம் பூ** போன்ற குறுந்திரைப் படங்களின் தரத்திற்கு முடிவல்ல... இல்லைதான். ஆனாலும் சுயம் படைப்பகத்தின் முதல் முயற்சி என்ற வகையில் பல குறைபாடுகளை மன்னிக்கலாம். ஏனெனில் பல குறைபாடுகளை மனந்திறந்து ஏற்றுக் கொண்டார்கள். இயலாமையை ஒத்துக் கொண்டார்கள். அது அவர்களை சுய விமர்சனம் செய்யத் தூண்டும் என்று நம்பலாம்.

தமது பிள்ளைகளை வெளி நாட்டுக்கு அனுப்பி வைத்தால் அது ஒரு முடிவைத் தரும் என்று நம்பும் பெற்றோர்களுக்கு இது **முடிவல்ல..**

சுவிஸிற்குப் போவதுதான் முடிவு என்று நினைத்து எல்லையைக் கடந்தால் எல்லாம் சரி என்று நினைத்து பொலிஸில் பிடிபட்ட அந்த இளைஞர்களின் எண்ணத்திற்கு இது **முடிவல்ல....**

மொத்தமாக புலம் பெயர்வு வாழ்வு எமது பிரச்சனைகளுக்கு எல்லாம் முடிவைத் தரும் என்று நம்புகிறவர்களுக்கு இது **முடிவல்ல..**

அது மட்டுமல்ல இது சுயத்தின் முடிவல்ல. மாறாக ஆரம்பம். இது போன்ற கதைகள் கூட இத்துடன் முடிவதில்லை. இன்னும் தொடரப் போகின்றன என்பதால். **முடிவல்ல..** இது.

---

## நூல் அறிமுகம்


பிரெஞ்சு நாடுபற்றியும், பிரெஞ்சு மக்களது சிறப்புக்கள் பற்றியும்
அறிந்து கொள்வதற்கு ஆர்வம் கொண்டோருக்கு
மிகவும் பயன்தரக்கூடிய நூல்.
எளிய முறையில் அமைக்கப்பட்ட இந்நூலின் ஆசிரியர்
திரு. சச்சிதானந்தம் அவர்கள் பன்மொழி ஆற்றலுள்ள ஓர் அறிஞர்.
மொழியியல் அறிஞரான இவரின் பல நூல்கள் ஏற்கனவே வெளிவந்துள்ளன.




**பிரான்ஸ் நாடும் பிரெஞ்சு மக்களும்**
எஸ். சச்சிதானந்தம்
பக். 404, விலை 90பிராங்ககள்.

தொடர்புகளுக்கு :
S. SACHCHITHANANTHAM
34, Avenue de la Pierrerie
77680 Roissy - en - Brie
France

தரமான அச்சுப்பதிப்பு வேலைகளுக்கு

**கிருஷ்ணா அச்சகம்**

- **குறித்த தவணை**
- **குறைந்த விலை**
- **தரம்**

**Imprimerie Krishna**
**73, Rue Doudeauville,**
**75018 Paris.**
M°: Marcadet Poissonniers / Château Rouge

**Tél. : 01 42 51 29 92**
**Fax. : 01 42 51 35 25**

**புதிய கம்பியூட்டர் பயிற்சி வகுப்பு**

கம்பியூட்டர் பயிற்சி வகுப்புகள் நடைபெறுகின்றன.
Windos 95, Write, Word, MS Dos, Corel Drew, Photo Graphic, Inter Net,
Excel கணக்கு வைக்கும் முறை, Paints Arts,
திருமண மற்றும் அழைப்பிதழ் காட் வகைகள் தயாரித்தல்,
விளம்பரங்கள் தயாரித்தல் என்பவற்றில் ஆரம்பம் முதல் விரிவான
தெளிவான பயிற்சியளிக்கப்படும்.
வகுப்புகள் சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் நடைபெறும்.
மேலதிக விபரங்களுக்கு:- 01 39 93 58 94.

www.tamilarangam.net

விடிவெள்ளி தோன்றியும்
விடிவில்லை எமக்கு
கார்காலம் போயும்
கதிரவனைக் காணவில்லை

புல்லின் மேல் பனித்துளி
புத்தொளி கண்டு மறையும் என்பார்
பனித்துளி உறைந்து நிற்க
கதிரவன் தான் மறைந்து போனான்

துன்பம் வரும்போது சிரி என்றார்
தூண்டில் மீன் சிரிப்பதுண்டோ?
பூட்டிய வீட்டினுள்ளும் சுதந்திரம்இல்லை
பூட்டை உடைக்கவும் தைரியம் இல்லை

அகதியாய் சில காலம்
அடிமையாய் பல காலம்
இப்படியே வாழ்க்கை என்றால்
இன்னும் ஒரு யுகம் எதற்கு?

— நிம்மி —



www.tamilarangam.net


உங்கள் எண்ணங்கள் எங்கள் கைவண்ணங்களில்

# குமார்ஸ்

நம்பிக்கை ~ நாணயம் ~ உத்தரவாதம்

தங்க நகைகளின்
தரமான தெரிவுக்கும்
ஆடவர் ~ நங்கையர்
சிறுவர்க்கான
ஆடைத்தேர்வுக்கும்
தரமான ஒடியோ, வீடியோ
பிரதிகளுக்கும்

குமார்ஸ் சொப் எஸ். ஏ. ஆர். எல்

**KUMARS SHOP** S.A.R.L.

80, Bld. Barbès, 75018 Paris.
M : Marcadet Poissonniers

Tél. 01 42 59 35 10 Fax. 01 42 59 35 00


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்